

# தீர்க்கதரிசியாகிய
# எலிசா



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# தீர்க்கதரிசியாகிய
# எலிசா

ஆசிரியர்
திருமறை அறிஞர்
மேய்ப்பர் A. கிறிஸ்டோபர்

RE - EDITION - MAY - 2017
TOTOAL COPIES - 1000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 42

FOR DETAILS CONTACT
**WINNAGA APPAM**
NO.4/2, NEHRU STREET,
SURAMPATTI,
ERODE – 638 009. S.INDIA
PHONE/Fax : (0424) 2277286
e-mail : erodeipa@yahoo.com
website:www.erodeipa.org
Bank of India (Erode Branch)
A/c No : 820210100005638
A/c Name : C.Alex Dhinakaran

## அணிந்துரை

திருமறைப் பொரியார்
அப்போஸ்தலர். **யோபு ஞானப்பிரகாசம்**
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் - 12.

இப்புத்தகத்தின் ஆசிரியர் டாக்டர் அகிறிஸ்டோபர் அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கின்றேன். எங்கள் I.P.A ஸ்தாபனத்தில் உள்ள ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களின் கண்காணிப்பாளராகிய இவர் சிறந்த எழுத்தாளரும், பிரசங்கியுமாவார்.

இருப்பத்தைந்து ஆண்டுகால ஊழிய அனுபவத்தில் இவர் கற்றுக் கொண்ட, பெற்றுக் கொண்ட சத்தியங்களையும் வேத வெளிச்சங்களையும் வகுத்து பகுத்து பேசியும் எழுதியும் வருகிறார்.

மிகத் தெளிவான முறையில் எளிய நடையில் இனிய தமிழில் இவர் எழுதிய புத்தகங்கள் ஆவிக்குரிய வட்டாரத்தில் மிகப்பெரிய அசைவை உண்டாக்கி வருகிறது என்பது உண்மை.

இவரது 42வது வெளியீடாகிய தீர்க்கதரிசியாகிய எலிசா என்ற இந்த நூல் ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் ஆகியோர் மத்தியில் திட்டமான நம்பிக்கையும், விசுவாசத்தையும் உருவாக்கும் என்பது நிச்சயம்.

மிகவும் துணிவாக அதே சமயம் பணிவாக இவர் எடுத்து சொல்லியுள்ள கருத்துக்கள் தெய்வ சித்தத்தை உரத்த சத்தமாய் உங்கள் உள்ளத்திற்குள் தொனிக்க செய்ய ஆவியானவர் அருள்புரிவாராக ஆமென் !



## என்னுரை

இனிய வாசகர்களே் இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபை உங்களோடு இருப்பதாக.

இந்த எலிசாவை உங்கள் முன்பு மகிழ்ச்சியுடன் நிறுத்துகிறேன். எலியாவிற்கு பிறகு இரண்டு மடங்கு வல்லமையோடு ஊழியம் செய்த எலிசாவைப் போல, இயேசுவின் சீஷராகிய நீங்களும் வல்லமையோடு செயல்பட எங்களை இந்நூலின் கருத்துக்கள் ஆயத்தப் படுத்தம் என்று நம்புகிறேன்.

என் சபை மக்களோடும் எனது மாவட்ட ஊழியர்களோடும் நான் பகிர்ந்து கொண்ட சத்தியங்களுக்கு நூல் வடிவம் கொடுத்து இதனை உருவாக்கி உள்ளேன்.

**என்னுடைய இருபத்தைந்து ஆண்டுகால ஊழியத்தின் நிறைவு நினைவு வெளியீடாக இஃ தினை வெளியிட்டுள்ளேன்.**

என்னுடைய சுகத்திற்காகவும், ஊழியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவண்
இரட்சகரின் இலக்கியப் பணியில்
**அ.கிறிஸ்டோபர்**

## என்னுரை

**அ**லைந்தேன் உம்மை அறியாமல்
**ஆ**சையாய் என்னை தேடி வந்தீர்
**இ**கத்தில் யாருமில்லை என்றழுதேன்
**ஈ**ன்றதாய் போல் என்னை தேடி வந்தீர்
**உ**லகத்தில் நடக்க முடி யாதென்றேன்
**ஊ**ன்றுகோல் நான் என தேற்றினீர்
**எ**ழுத இயலாதென நானழுதேன்
**ஏ**ங்காதே ஞானம் நானென்றீர்
**ஐ**யம் நிறைந்தவன் நானென்றேன்
**ஒ**ன்றும் அனுகாதென வாக்குரைத்தீர்
**ஓ**யா பெலவீனம் தாக்குதென்றேன்
**ஔ**ஷதம் நான் உனக்கு என்று சொன்னீர்
இஃதுவரை சேதமின்றி காத்ததினால்
இந்நூலை எழுதி படைக்கிறேன்

இவண்
**அ.கிறிஸ்டோபர்**



## உள்ளே


1. ஆச்சரியமூட்டும் மனிதன்
2. அழைக்கப்பட்ட மனிதன்
3. அற்புதங்களின் மனிதன்
4. ஆவிக்குரிய மனிதன்
5. அடக்கமுள்ள மனிதன்
6. ஆதாயம் தேடாத மனிதன்
7. அயராது ஓடிய மனிதன்

# 1

# ஆச்சரிய மூட்டும் மனிதன்

“என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்” என்ற யோவான் 14:12 வசனத்தை வாசிக்கும் போதெல்லாம், இது ஆகின்ற காரியமா என்றெண்ணி ஆச்சரியத்தால் ஆவென்று வாய் பிளந்து நின்றிருக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் வேதத்தில் இருக்கிற சில பாத்திரங்கள் என் கண் முன்னே காட்சிகளாய் வந்து போகும். தண்ணீர் மேல் நடந்தது மட்டுமல்ல, தபீத்தாளே என்றவுடன் மரித்தவள் எழுந்தாளே, அந்த அற்புதத்துக்கு சொந்தக்காரராகிய பேதுரு என் கண் முன் வந்து போவார்.

இயேசு உடுத்தியிருந்த வஸ்திரத்தை தொட்டவுடன் பெரும்பாடுள்ள ஸ்திரி சுகமானாள் என்பது சுவிஷேசம் சொல்லுகிற உண்மை. ஆனால் உடலில் இருந்து உருவிப் போட்ட உறுமால்களினாலும், கச்சைகளினாலும் பிணியாளிகள் குணமான உண்மையை நடபடிகள் கூறுகிறது. இந்த அற்புதத்துக்கு சொந்தக்காரராகிய பவுல் என் கண் முன்னே வந்து போவார்.



இப்படி புதிய ஏற்பாட்டு பாத்திரங்கள் பளிச்சென்று என் சிந்தனையில் தோன்றினாலும் யோவான் 14 : 12ஐ எண்ணி, எண்ணி பார்க்கும் போதெல்லாம் என் கண்களுக்கு முன்பாக மின்னி மின்னி முகம் காட்டி என்னை அகமகிழச் செய்யும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான் ஒருவரை உங்களுக்கு அடையாளம் காட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்த எலிசா என்று வேதத்தில் அடையாளம் காட்டப்பட்டுள்ள எலிசா ஒரு அற்புதமான பாத்திரம்.

எலியாவைக் குறித்து நான் புத்தகம் எழுதிய போது எலிசாவைக் குறித்தும் புத்தகம் எழுத வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் எலியாவைக் குறித்து வேதத்தில் தேடி வாசிக்க வாசிக்க எனக்குள் எலிசா பிரம்மாண்டமாக வளர ஆரம்பித்துவிட்டார். எலிசா ஒரு கற்பனை பாத்திரமல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் லூாக்கா 4 : 27ல், மேற்கோள் காட்டப்பட்ட, உலகில் வாழ்ந்த, உண்மையான தீர்க்கதரிசி என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

எலியாவுக்கும், எலிசாவுக்கும் இடையே அநேக ஒற்றுமைகள் இருக்கிறது. எலியா கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருந்தது போல எலிசாவும் கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருக்கிறார்.

இயேசுவுவைப் போலவே குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார். கொஞ்சத்தைக் கொண்டு அநேகரை போஷித்தார். அற்புதங்களை நிகழ்த்தினார்.

மட்டுமல்ல எலியாவைப் போலவே எலிசாவும் கிறிஸ்துவுக்குப் பின் திருச்சபை பெற்றுக் கொண்ட கூடுதல் சிலாக்கியங்களுக்கு முன் அடையாளமாக இருக்கிறார். எலியாவைப் போல் எலிசா இருமடங்கு அற்புதங்களை செய்தார். அது மட்டுமா? எலியாவின் அற்புதங்கள் அவர் பூமியில் உயிரோடிருந்த நாட்களில் மாத்திரம் நிகழ்ந்தது. ஆனால் எலிசாவின் வாழ்வில் அவர் மரித்து அவர் உடல் மண்ணோடு மண்ணாக மக்கிப் போனாலும், அவர் மேல் இருந்த அபிஷேகத்தின் வல்லமை அவருடைய எலும்புகளுக்குள் இருந்ததினால், மரித்த பிரேதத்தையும் உயிரோடு கூட எழுப்பியது.

இந்த சம்பவம் தான் என் உள்ளத்தை துள்ளச் செய்கிறது. என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்த கிரியையை செய்வான். என்னிலும் பெரிய கிரியை செய்வான் என்ற எனது இரட்சகரின் வார்த்தையை இருதயத்தில் விசாலமாய் ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. எலியாவை பின்பற்றின எலிசாவுக்கு இருமடங்கு வல்லமை, இறந்த பின்னும் வல்லமை இருந்தது உண்மையானால் இயேசுவை விசுவாசிக்கிற, பின்பற்றுகிற திருச்சபையாகிய நமக்கு யோவான் 14 : 12, சிலாக்கியம் கிடைப்பது அதிக நிச்சயமல்லவா?

லூக்கா 4 : 27ல், தீர்க்கதரிசி என்று இயேசுவால் அங்கீகரிக்கப்பட்ட எலிசா நல்ல விசுவாசிக்கும்,



ஊழியக்காரனுக்கும், தலைவருக்கும் சரியான முன் மாதிரியாக இருக்கிறார். இளம் வயதில் ஒரு விசேஷித்த நோக்கத்தோடு தேவனை பின்பற்றும்படி தனக்கு உண்டானவைகளை தியாகம் செய்து விட்டு, தீர்க்கதரிசியின் பின்னே சென்ற எலிசா தொண்டனாக, விசுவாச வீரனாக, தலைவனாக, தீர்க்கதரிசியாக, தெய்வ ஜனத்திற்கு தகப்பனாக, தேவனுடைய வாயாக வாழ்ந்து காட்டியது வேதத்தில் வாசிக்கும் போது, இந்த கிருபையை எனக்கு தாரும் என்ற விண்ணப்பம் எனக்குள் புறப்பட ஆரம்பிக்கிறது. சில நேரங்களில் அது புலம்பலாக மாறி, கண்களை குளங்களாக மாற்றி விடுகிறது.

வாருங்கள் சாகும் வரை சறுக்கிவிழாத, சாகும் வரை சாதித்த எலிசாவை உங்களுக்கு அறிமுகம் செய்ய, அடையாளம் காட்ட அழைக்கின்றேன். என் பின்னே வாருங்கள்.

## 2

# அழைக்கப்பட்ட மனிதன்

எலியாவைக்குறித்து வாசிக்கும் போது எப்படி அழைக்கப்பட்டார்? எதற்காக அழைக்கப்பட்டார்? என்ற விபரங்கள் மறைக்கப்பட்டு இருக்கிறது. எலிசாவுக்கு கூட தேவன் முழுமையாய் அவ்வழைப்பை ஆரம்பத்திலே வெளிப்படுத்தவில்லை என்பதை மாத்திரம் வேதத்தை வாசிக்கிற என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு முடிவுக்கு வந்து மனம் நொந்து, போதும் என்னை எடுத்துக் கொள்ளும் என்று எலியா ஜெபித்த பிறகுதான், நீ ஆசகேலை அபிஷேகம் பண்ணு, எலிசாவை அபிஷேகம் பண்ணு என்று தேவன் தமது திட்டத்தை எலியாவுக்கு வெளிப்படுத்தினார்.

ஆனால் எலிசாவைக் குறித்த அறிமுகத்தை வேதத்தில் வாசித்துப் பாருங்கள். அவருடைய அழைப்பு எவ்வளவு திட்டமும், தெளிவாகவும் இருக்கிறது என்பதை கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

*பின்பு... ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு. சம்பவிப்பதாவது ஆசகேலின் கைக்கு தப்பினவனை யெகூ கொன்று போடுவான். யெகூவின் கைக்கு தப்பினவனை எலிசா கொன்று போடுவான் ( 1 இராஜா 19 : 16, 17).*



இந்த வசனத்தை நிதானமாக வாசித்து சிந்தனை செய்தால், ஒரு மனிதனை எப்படி கர்த்தர் அழைக்கிறார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

1. ஆபேல் மேகொலா - **என்ன ஊர்?**

2. சாப்பாத்தின் குமாரன் - **யாரின் மகன் ?**

3. தீர்க்கதரிசியாக - **என்ன ஊழியம் ?**

4. கொன்று போடுவான் - **என்ன திட்டம் ?**

இந்த நான்கு காரியங்களையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். தேவனுடைய ஊழியம் பொதுவானதாக இருந்தாலும், ஒவ்வொருவரையும் குறித்த தேவனுடைய திட்டம் பொதுவானதாயிராமல் வித்தியாசமானதாய் இருக்கிறது. அப்படியே வித்தியாசப்பட்ட ஊழியங்களில், குறிப்பிட்ட ஒரு ஊழியத்திற்கென்று பலரை கர்த்தர் அழைத்தாலும் அவர்களைக் கொண்டு நிறைவேற்ற நினைக்கிற திட்டமும் வித்தியாசப்படுகிறது.

எனவே கர்த்தரின் மகிமையான ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டவர்கள் அல்லது அழைக்கப்பட்டதாக சொல்லிக் கொள்கிறவர்கள், உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

கிறிஸ்து உங்களை எதற்காக அழைத்தாரோ (பிடித்தாரோ) அதையே நீங்கள் உறுதியாக பற்றிக் கொள்ளுங்கள்.

மோசேயின் ஊழியமும், யோசுவாவின் ஊழியமும் ஒன்றுதான். ஆனால் அவர்களைக்கொண்டு

தேவன் செய்ய நினைத்த திட்டம் வெவ்வேறு என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து, வனாந்திரத்துக்கு கொண்டு வருவது மோசேயைக் குறித்த தேவனுடைய திட்டம். வனாந்திரத்தில் இருக்கிற மக்களை நடத்தி, கானானுக்குள் குடி அமர்த்துவது யோசுவாவைக் குறித்த தேவனுடைய திட்டம்.

இன்னும் ஒன்றை கவனியுங்கள், தாவீதைக் குறித்தும், சாலமோனைக் குறித்தும் தேவனுக்கு ஒரே நோக்கம் இருந்தது.

இஸ்ரவேலரை காக்க வேண்டும். ஏக காலம் ஆளவேண்டும். ஆனால் அவ்விருவரையும் குறித்த தேவனுடைய திட்டம் என்பது வெவ்வேறாக இருந்தது. தேவாலயத்துக்கு தேவையான சகலத்தையும் சவதரித்து வைப்பது தாவீதைக் குறித்த தேவனுடைய திட்டம், ஆயத்தமாக்கப்பட்டுள்ள அனைத்தையும் வைத்துக் கொண்டு ஆலயத்தைக் கட்டி எழுப்புவது என்பது சாலமோனைக் குறித்த தேவனுடைய திட்டம்.

எங்கேயோ போய் விட்டேன் என்று நீங்கள் எண்ண வேண்டாம். எலிசாவை தேவன் பெயரைச் சொல்லி, தகப்பன் பெயரைச் சொல்லி, ஊர் பெயரைச் சொல்லி, திட்டமாய் அழைத்தார். அது மட்டுமா தீர்க்கதரிசியாக தன்னுடைய வார்த்தையின்படியே நியாயத்தீர்ப்பை நிறைவேற்றும் (கொன்று போடும்படி) திட்டத்துக்காக அழைத்தார். அன்பு ஊழியரே, நீங்கள் திட்டமாய் அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா? என்ன திட்டத்திற்காய்



அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா? இப்படியெல்லாம் நான் கேள்வி கேட்பதினால் இவர் ஒரு பிற்போக்குவாதி என்று எனக்கு முத்திரை கொடுத்து விடாதீர்கள். தேவன் சொல்லாத ஒரு ஊழியத்தை, கொடுக்காத உக்கிராணுவத்துவத்தை நீங்கள் செய்யாதீர்கள்.

இயேசு தன்னுடைய ஊழிய நாட்களில் சொன்னதை நீங்கள் நிச்சயமாக வேதத்தில் வாசித்து இருப்பீர்கள் என நம்புகிறேன். அந்நாட்களிலே சிலர் வந்து உம்முடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தோம், உம்முடைய நாமத்தில் பிசாசுகளை துரத்தினோம் என்பார்கள். அப்போது நான் அவர்களை நோக்கி என்னை விட்டு அகன்று போங்கள், என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றாதவர்கள் என்பேன்.

எவ்வளவு கடுமையான வார்த்தை பார்த்தீர்களா? தீர்க்கதரிசனம் சொல்லுவது, பிசாசுகளை துரத்துவது, ஊழியம் செய்வது நல்லது தான். ஆனால், தேவ திட்டத்தை (தேவ சித்தத்தை) நிறைவேற்றாவிட்டால் நாம் தேவனுக்கு முன்பாக குற்றவாளியாக நிற்போம்.

தேவன் அழைத்த ஊழியத்தை நிறைவேற்றாமல் இருப்பது எவ்வளவு தண்டனைக்குரியதோ, அதைப் போலவே தேவன் அழைக்காத ஊழியத்தை செய்வதும் தண்டனைக்குரியது.

உங்களுக்குரிய ஆத்தும பாரத்திற்காகவும், ஆர்வத்திற்காகவும் கர்த்தரை துதிக்கின்றேன். ஆனால் ஆர்வக்கோளாறு நிமித்தம் தேவை இல்லாத அலுவலில் சிக்கிக்கொள்ளாதிருங்கள் என எச்சரிக்கின்றேன். சிலருக்கு அழைப்பே இருக்காது. சிலருக்கு அழைப்பு

இருக்கும். அனால் எதற்காக அழைக்கப்பட்டோம் என்று தெரியாது.

இப்படிப்பட்டவர்கள் திடீர் பாஸ்டர்களாகி, பாஸ்டாக ஓடி, வேஸ்டாகி போகிறார்கள். சிலருக்கு பாஸ்டர் என்று தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக்கொள்வது அலாதிப் பிரியம் என்று சொல்லுவதைவிட அரிப்பு என்று சொல்லலாம். இப்படி அழைக்கப்படாத சிலர் பாஸ்டராகி, சில ஆண்டுகளுக்கு பிறகு பெனாயில் வியாபாரியாக மாறி, சில காலத்திற்கு பிறகு இடந்தெரியாமல் போனதைக் கண்ட (கேட்டு) மனம் துடித்து இருக்கிறேன்.

இந்த நூலை எழுதுகிற இன்று காலையில் கூட ஒரு நோட்டீசை படித்தேன். அதில் சபையே இல்லாத, உலகம் சுற்றும் வாலிபனுக்கு முன்னால் பாஸ்டர் என்று போடப்பட்டு இருப்பதை கண்டு சிரித்துக் கொண்டு அழுதேன். மன்னிக்கவும் அழுது கொண்டே சிரித்தேன்.

அவரை பாஸ்டராக ஆக்கியது ஆண்டவரா? அச்சகத்தாரா? என்ற ஆராய்ச்சிக்கு இறங்கவில்லை. பாஸ்டர் என்றால் மேய்ப்பன் என்று பொருள். மேய்ப்பன் என்றால் அவனுக்கு மந்தை இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் வீடு வீடாய் படியேறி, வரும்படி தேடுகிறவர்கள் குறைந்த பட்சம் பாஸ்டர் என்று சொல்லிக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

கர்த்தர் எலிசாவிடம் அல்ல, எலியாவிடம் தான் இத்தனை விபரங்களை சொல்லி இருந்தார். எலியா வருகிற போது எலிசா வயல் காட்டில் இருந்தார்.

எலியா வந்து தன் சால்வையை எலிசாவின் மேல்



போட்டார். அவ்வளவு தானே தவிர ஒரு பெரிய பிரசங்கத்தை செய்யவில்லை. ஆனால் அக்கனமே எலிசா அனைத்தையும் விட்டு விட்டு எலியாவுக்கு பின் சென்றான்.

ஒன்றுமே கேட்காமல் உடனே எலிசா சென்றது காரணம் என்னவாக இருக்கும்? யோசித்து பார்த்தீர்களா? தேவன் ஒரு மனிதனை அழைக்கும் போது, ஒரு மனிதனுக்கு உள்ளான வெளிப்பாட்டையும், சமாதானத்தையும் தருகிறார். அதற்கு புறம்பான உறுதிப்பாட்டை தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு அளிக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மோசே பல ஆண்டுகளுக்கு முன்பாகவே எகிப்து தேசத்தை விட்டு மீதீயான் தேசத்துக்கு போய்விட்டார். தேவன் அவனை சந்திக்கிறார். மோசேயும் தேவனும் பேசுகிறார்கள். மோசேக்கு வாயாக ஆரோனை நியமித்து இருப்பதாக ஆண்டவர் சொல்லிவிட்டு உன்னைக் காண ஆரோன் புறப்பட்டு வருகிறான். (யாத் 4 : 14, 15) என்றார்.

அத்தோடு விட்டாரா? கர்த்தர் ஆரோனை நோக்கி, வனாந்திரத்தில் மோசேக்கு எதிர்கொண்டு போ என்றார் (யாத் 4 : 27). தம்முடைய திவ்விய அழைப்பை ஆரோனுக்குள்ளும் வைத்தார். அதற்கான உறுதிப்பாட்டை மோசேக்குள்ளும் வைத்து இருந்தார்.

இதைப்போலவே அழைப்புக்கான வெளிப்பாட்டை எலிசாவுக்குள்ளும், உறுதிப்பாட்டை எலியாவுக் குள்ளும் தேவன் வைத்து இருந்தார். எனவே தான் சால்வை தன் மேல் விழுந்தவுடன் சற்றும் தாமதியாமல் அழைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு எலிசா

ஊழியத்திற்கென்று புறப்பட்டார். கர்த்தர் உங்களை ஊழியத்திற்கென்று அழைத்து இருப்பார் என்றால், யாரோ ஒருவர் மூலம் மாத்திரம் அல்ல, உங்களுக்குள்ளேயும் தமது அழைப்பின் வெளிப்பாட்டை திட்டமாய் வெளிப்படுத்துவார்.

தேவனுடைய அழைப்பை புரிந்து கொள்ள தேவனுடைய ஆவி அவசியம். ஜெபம் அவசியம். இவைகளைப் போன்றே இன்னும் ஒரு காரியம் அவசியம். அதிலே போதிய அனுபவம் இல்லாததினால்தான் தேவ அழைப்பின் உரத்த குரலை பகுத்தறிய முடியாமல் போய்விடுகிறார்கள். ஒரு உண்மையை சொல்லுகிறேன். போதிய வளர்ச்சி பெறாமல் குழந்தைகளாய் நாம் இருப்போமாகில் தேவனே நேரிடையாக நம்மை பெயர் சொல்லி அழைத்தாலும், இது தெய்வ சத்தம் என்று உணர முடியாமல் மனித சத்தமே என்று மயக்கமுற வேண்டியிருக்கும்.

சாமுவேல் என்கிற பிள்ளையாண்டான் ஏலியினிடத்தில் வளர்ந்த காலத்தில், திரும்ப திரும்ப சாமுவேலே சாமுவேலே என்று தேவன் அழைத்ததை புரிந்து கொள்ளாமல், ஏலியை நோக்கி அழைத்தீரோ, அழைத்தீரோ என திரும்ப திரும்ப திகைப்போடு கேட்டான். தேறின ஏலியோ தெளிவாக சொன்னான், பிள்ளையாண்டானே இது தேவ சத்தம். அடுத்த முறை சத்தம் வந்தால், சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல் - இந்த வார்த்தைகளை அப்படியே சொன்ன சாமுவேல் அன்று முதல் தீர்க்கதரிசியாகி விட்டான்.

அன்று அழகான ஒரு பாடத்தை சாமுவேலுக்கு ஏலி சொல்லிக்கொடுத்தார். இன்று அழகானது



மாத்திரமல்ல அற்புதமானதும், ஆழமானதுமான பாடத்தை நமக்கு புகட்ட பரிசுத்த வேதாகமத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார்.

ஆம், தேவனுடைய அழைப்பை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. எந்த மனிதன் தேவனுடைய வார்த்தையை சரியாய் அறிந்து இருக்கிறானோ, அவனே தேவனுடைய அழைப்பையும் புரிந்து கொள்கிறான்.

எலியா நேரில் வந்து எலிசாவை தனது சால்வையால் மூடுகிறான். அதே நேரத்தில் எலிசாவுக்கு அழைப்பின் நீளம், அகலம், ஆழம் வெளிப்பட்டு விட்டது. போவாஸ் ரூத்தின் மேல் போர்வையை விரித்து அவளை தனக்கு சொந்தமாக்கி கொண்டதை வேதத்தின் அடிப்படையில் மார்க்கரீதியான உண்மையின் அடிப்படையில் புரிந்து கொண்ட எலிசா, தன் மேல் விழுந்த சால்வையினால் தான் எலியாவுக்கு சுதந்திரவாளி என்பது மட்டுமல்ல, அவன் தீர்க்கதரிசன ஊழியத்தின் அடுத்த வாரிசு நான்தான் என புரிந்து கொண்டான்.

எனவே சற்றும் தயக்கமின்றி, தாமதமின்றி தனக்குண்டானவைகளை விட்டு தகப்பன் பின் செல்லும் தணையனைப் போல தன் தலைவனுக்கு பின்னே தன்னடக்கமாய் சென்றான்.

தேவன் தம்முடைய மகத்துவமான ஊழியத்திற்கு இரண்டு விதமாக அழைக்கிறார். மோசே, எலியா போன்றவர்களை தேவனே நேரிடையாய் அழைத்தார். இது ஒரு விதம். கர்த்தர் மோசேயினிடத்தில், "யோசுவாவை அழைத்து உன் ஸ்தானத்தில் அவனை நிலைப்படுத்து, உன் கைகளை அவன் மேல் வைத்து

உன் கனத்தில் அவனுக்கு கொஞ்சம் கொடு" என்றார். மோசே அப்படியே செய்தார். இதைப் போலவே எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக வை என்று எலியாவிடம் சொன்னார். எலியாவும் அப்படியே செய்தார். இது மற்றொரு விதம்.

எந்த விதத்தில் கர்த்தர் அழைத்தாலும் அந்த அழைப்பை புரிந்து கொண்டு சுணக்கமில்லாமல் இணக்கமாய் வருகிறவர்களை, தேவன் மகிமையாய் பயன்படுத்துவார் என்பதற்கு எலியா- எலிசா என்பவர்கள் நல்ல மாதிரிகளாய் இருக்கிறார்கள்.

தலைவர்கள் என்பது தேவனுடைய திட்டத்தில் விஷேசமானது. தம்முடைய ஜனத்தை சரியாய் நடத்தவும், ஆளுகை செய்யவும் தேவன் தலைவர்களை ஏற்படுத்துகிறார். வேதத்தில் ஆசாரியர்களை, தீர்க்கதரிசிகளை, நியாயாதிபதிகளை, ராஜாக்களை தம்முடைய ஜனத்தின் மேல் அவ்வப்போது தலைவர்களாக வைத்தார் என்பதை நம்மால் வாசிக்க முடியும். அவர்களுக்கு அதற்கென்று தனி அழைப்பும், அபிஷேகமும் இருந்தது என்பது வேதம் தருகிற வெளிச்சமாகும்.

இப்படிப்பட்ட அழைப்பும் - அபிஷேகமும் இல்லாமலேயே, ஆசாரிய ஊழியத்திற்கென்றும், தீர்க்கதரிசியின் ஸ்தானத்திற்கென்றும், ராஜ பதவிக் கென்றும் சிலர் எழும்பினர் என்பதை வேதத்தில் ஆவியானவர் பதிவு செய்து வைத்திருக்கிறார். அவை வெறும் தகவல்கள் அல்ல, நமக்கு சரியான எச்சரிப்புகள் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.



முன்னே தேவனுடைய அழைப்பு இரண்டு விதத்தில் வெளிப்படுகிறது என்று சொன்னேன். இப்பொழுது தலைவர்கள் - (ஊழியர்கள்) இரண்டு விதத்தில் ஸ்தானத்திற்கு வருகிறார்கள் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(1) தேவ சித்தத்தின்படி வருகிறவர்கள்.

(2) மனித (சுய ) சித்தத்தின்படி வருகிறவர்கள்.

தேவ சித்தத்தின்படி வருகிறவர்கள் நிலைக்கிறார்கள், நிலைப்படுத்துகிறார்கள். மனித சித்தத்தின்படி வருகிறவர்கள் அழிகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள்.

சாமுவேலே, தைலக் குப்பியை எடுத்து தாவீதை அபிஷேகம் பண்ணு, எலியாவே எலிசாவை அபிஷேகம் பண்ணு. இவைகளெல்லாம் தேவ சித்தத்தின் படி உருவான தலைவர்களுக்கு மேற்கோள்கள். தேவ சித்தத்தின்படி எழும்பின இவர்களுக்கு நெருக்கம் வந்தது. உபத்திரவங்கள் வந்தது. ஆனால் அவைகளை ஜெயிப்பதற்கும், தெய்வ ஜனத்திற்கு உழைப்பதற்கும் உசிதமான பெலன் இருந்தது.

ஆனால் மனித (சுய) சித்தத்தின்படி எழும்பின ராஜாக்கள் (கள்ள தீர்க்கதரிசிகள்) ஆகியோர் நிலையை பாருங்கள். பரீட்சைக்கு நிற்க முடியாமல் பாதியிலேயே ஒழிந்து போனார்கள்.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட தாவீது காலத்திலேயே அப்சலோம் என்பவன் தன்னை ராஜாவாக காட்டிக் கொண்டான். அப்சலோம் யாரோ ஒருவன் அல்ல. தாவீதினுடைய சொந்த குமாரன். தவறு

செய்த அப்சலோமை தயவாய் தாவீது மன்னித்து தன்னருகே வைத்து இருந்தாலும், தன்னலம் பிடித்த அப்சலோம் தகப்பனையே தவிக்க வைத்து தானே ராஜா என்று தம்பட்டம் அடிக்க வைத்தார்.

இப்படி தகப்பனை தவிக்க வைக்கும் அப்சலோமைப் போல, தன்னை ஆவிக்குள் பெற்று வளர்த்த ஆவிக்குரிய தகப்பனாகிய தன்னுடைய போதகரையே தத்தளிக்க வைக்கும் அப்சலோம்கள் சபைகளுக்குள்ளே எழும்பி சதுரங்கம் ஆடுவது தான் இந்தக் கடைசி காலத்தில் பெருகி இருக்கிற மிகப் பெரிய கொடுமை.

அப்சலோமின் தந்திரமான சதிச் செயல்களின் வளர்ச்சியை II சாமுவேல் 15ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் வரிசைப்படி பதிவு செய்து வைத்து இருக்கிறார்.

1. தனக்கு எதிர்ப்பட்டவர்களிடம் தானே சென்று நீ நல்லவன், ராஜா கெட்டவன் என்று நித்தம் சொல்லி தகப்பனைக் குறித்த தீயபடத்தை மக்கள் உள்ளத்தில் வரைந்தான். (II சாமுவேல் 15 : 6)

2.தனக்கு ஒரு பொருத்தனை உண்டு. நிறைவேற்ற போக வேண்டும் என்று பொய்யைச் சொல்லி நம்ப வைத்து சொந்த தகப்பனின் கழுத்தை அறுக்கும் செயலுக்கு தன்னை விற்றுப் போட்டான். (II சாமுவேல் 15 :8)

3.தன்னுடைய நய வசனிப்பினாலே ஏதும் அறியாத அப்பாவி ஜனங்களை தன் பக்கமாய்



சேர்த்துக்கொண்டு, அப்சலோமே ராஜா! என்று சொல்ல சொல்லிக் கொடுத்தான்- சொல்ல வைத்தான். (II சாமு 15:11)

இப்படிப்பட்ட அதிரடி செயலினாலே தாவீது ஆடிப்போனதும், வாடிப்போனதும், ஓடிப்போனதும், வனாந்திரத்தை நாடிப் போனதும் உண்மை என்றாலும், தேவனால் ஏற்ப்படுத்தப்பட்ட தலைவனாகிய தாவீது மடிந்து போகவில்லை. மாறாக அப்சலோமின் ஆயுள் முடிந்து போனது என்பது தான் உண்மை. தலைவர்களே! போதகர்களே! போதகர்களே! உங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர் என்றால் , தேவனால் ஏற்ப்படுத்தப்பட்டவர் என்றால் உங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

உங்களால் வளர்க்கப்பட்டு, உங்களால் உருவாக்கப்பட்ட ஒரு சிலர் உங்களோடு கூட இருந்து கொண்டே உங்களை குறித்த தீய படத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி, உங்களிடத்தில் உண்மையை பேசுவது போல் கபட நாடகமாடி, களங்கமில்லா விசுவாசிகளை கரைய வைத்து, கட்சி சேர்த்து கடைசியில் உங்களை கதற வைக்க அப்சலோமைப் போல எழும்பினால், அதைக் கண்டு அஞ்சி விடாதீர்கள். வனாந்திரம் கிடைக்குமா? என்று தாவீதைப் போல் வழி தேடாதீர்கள் !

கர்த்தர் உங்களை வைத்த இடத்தில் - ஊழியத்தில் சிங்கத்தைப் போல தைரியமாய் இருங்கள். அந்த சிறு நரிகள் உங்களை ஒன்றும் செய்ய முடியாது.

அப்சலோமுக்கு என்னவாயிற்று தெரியுமா? கடைசியில் கழுதை கூட அவன் பக்கத்தில் இல்லை. அந்தரத்தில் தொங்கினான் அந்தோ !

இந்த வரிகளைப் படிக்கிற சிலர் தங்கள் கண்ணீரின் பாதையில் இப்பொழுது ஒரு கதகதப்பை பெற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். ஏனென்றால் இந்த சம்பவங்களை வேதத்தில் இருந்து அறிந்து கொண்டவன் மாத்திரமல்ல, எனது - **25** ஆண்டு கால ஊழியப் பாதையில் அனுபவ பூர்வமாய் உணர்ந்தவன் நான். ஆகவே தான் உங்களை திடப்படுத்த தைரியமாய் எழுதுகிறேன்.

அன்பர்களே! நண்பர்களே! உங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். கர்த்தர் உங்களை அழைக்காத ஊழியத்தில் அத்து மீறி நுழையாதீர்கள்.

கர்த்தர் உங்களை அழைத்து இருந்தாலும், அவர் உங்களுக்கென்று குறித்திருக்கிற கால கட்டத்திற்கு முன்பு அவசரப்பட்டு நெஞ்சை நிமிர்த்தி இருக்காதீர்கள்.

இன்னும் என் வேளை வரவில்லை என்று ஈன்ற தாயிடமே இயம்பின இயேசுவின் வார்த்தை உங்கள் இருதயத்தில் எதிரொலிக்கக்கடவது. எலியா எலிசாவை தன் ஸ்தானத்திற்கென்று நியமித்தான். ஆனால் தனித்தோ அல்லது பிரிந்தோ தீர்க்கதரிசன ஊழியத்தை துணிகரமாக செய்யாமல் தேவன் குறித்த வேளை வரும் வரைக்கும் எலியாவோடு ஒட்டிக் கொண்டிருந்ததை உங்கள் சிந்தையில் வையுங்கள்.

சாமுவேல் தன்னை ராஜாவாக அபிஷேகித்திருக்கிறார் என்பதை தெளிவாக அறிந்து இருந்தும்



அவசரப்படாமல் ஆத்திரப்படாமல் மேய்ப்பனாகவும், போர்ச் சேவகனாவும், சேனைத் தலைவனாகவும் பொறுமையைக் கடை பிடித்து தன் ராஜாவாகிய சவுல் தன்னை நிந்தித்தாலும், தன்னை துரத்தினாலும் அவனைப் பகைக்காமல் அவன் மரித்த பிறகும் அவனைக் கனம் பண்ணி ஆண்டவருடைய வேளை வரைக்கும் அடங்கி இருந்த தாவீதை உங்கள் சிந்தையில் வையுங்கள்.

எலிசாவை விட்டு விட்டு நான் எங்கேயோ போய் விட்டேன் என எண்ணி விடக்கூடாது. எலிசா அழைக்கப்பட்ட ஒரு மனிதன். அந்த அழைப்பைக் குறித்து விவரிக்கத்தான் இத்தனை விளக்கங்கள் - கீழே நான் எழுதப் போவதை வாசித்துக் கொண்டே, கூர்ந்து சிந்தியுங்கள்.

எலியாவிடம்

*(1)* ஆசகேலை அபிஷேகம் பண்ணு, யெகூவை அபிஷேகம் பண்ணு, எலிசாவை அபிஷேகம் பண்ணு என்று கர்த்தர் சொல்லி இருந்தார். *( 1 ராஜாக்கள் 19: 15, 16)*

ஆனால் நீங்கள் வேதத்ததைத் தெளிவாக வாசித்துப் பார்த்தால் எலியா ஆசகேலையோ, யெகூவையோ அபிஷேகம் பண்ணி வைக்கவில்லை. மாறாக கடைசியில் சொல்லப்பட்ட எலிசாவை முதலில் அபிஷேகம் பண்ணினான். இந்த கால கட்டத்தில் எலியாவின் ஊழியத்தில் இஸ்ரவேல், சமாரியா ஆகிய நாடுகளின் அரசியல் சூழ்நிலைகளில் எத்தனையோ மாறுதல் ஏற்படுகின்றது. முடிவாக எலியா பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

அதன் பின் நடந்தது என்ன தெரியுமா? எலிசா தன்னுடைய உதவியாளனை அழைத்து யெகூவை வேறு பிரித்து அபிஷேகம் பண்ணுவிக்கிறான் (II இராஜா 9:6)

இந்த சம்பவத்தை வாசிக்கும் பொழுது அழைக்கப்பட்டவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணத்தை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். தன் தலைவனுக்கு கொடுக்கப்பட்ட இலக்கை, ஊழியத்தை, வெளிப்பாட்டை அவன் மரித்த பிறகும், தன் சிரசின் மேல் ஏற்றுக்கொண்டு அவைகளை பூர்த்தி செய்து, தனக்கென தனிப்பாதையோ, மகிமையோ தேடாமல், தலைவன் வழி நடப்பவனே அழைக்கப்பட்டவன்.

# 3

# அற்புதங்களின் மனிதன்

எலிசாவின் வாழ்க்கையை முற்றிலும் கவனித்துப் பாருங்கள். எப்பக்கத்திலும், எவ்விடத்திலும் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்ததைக் காண முடியும். சாப்பாட்டிலும் அற்புதம், சாவிலும் அற்புதம், ஆற்றுத் தண்ணீரிலும் அற்புதம், ஊற்றுத் தண்ணீரிலும் அற்புதம். இப்படிப்பட்ட அற்புத மனிதனுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

ஊழியத்தின் ஆரம்பத்தின் முதல் மணிநேரமே அற்புதம். அடக்கம் பண்ணப்பட்டு ஆண்டுகள் பல கடந்த பின்னும், அழியா நின்ற எலும்புகளினாலும் அற்புதம். இவைகளை எண்ணிப் பார்க்கும் போது இதயம் பூரிப்படைகிறது. எலியா - எலிசா இவர்கள் ஊழியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது எனக்கு ஆச்சரியம் பொங்குகின்றது.

பரலோகத்திலிருந்து அக்கினியை இறக்கி பாகாலின் தீர்க்கதரிசிகளின் ஆட்டத்தை அடக்கம் செய்த எலியா உலகத்திலிருந்த நாட்களில் கடைசியாக செய்த அற்புதம் யோர்தானை இரண்டாகப் பிளந்து அக்கரை சென்றது. அதே நேரத்தில் ஊழியத்தின் வெகு ஆரம்பத்தில் எலிசா செய்த முதல் அற்புதம் என்ன தெரியுமா? யோர்தானை இரண்டாகப் பிளந்து இக்கரைப்பட்டதுதான். இதுதான் எலிசா எதிர்பார்த்த இரட்டிப்பான வரம். தன்னுடைய குரு கடைசியாக

செய்த அற்புதத்தை இந்த சீஷன் வெகு லகுவாக முதலிலேயே செய்துவிட்டார். இதற்கு இரண்டு வித அடிப்படைக் காரணங்கள் என் கண் முன்னே மின்னிவிடுகிறது.

***பற்றியெறியும் வாஞ்சை :*** எலிசாவின் உள்ளத்திற்குள் அற்புதம் செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொழுந்து விட்டு எரிந்தது என்பது உண்மை. தன்னுடைய வழிகாட்டியின் வாழ்வில் அடுத்தடுத்து அற்புதங்கள் நிகழ்ந்த வேளையில் அதைவிட பெரிய அற்புதம் என் வாழ்வில் நிகழ வேண்டும் என்ற ஆவல் எலிசாவிற்குள்ளே வளர்ந்து வந்தது என்று நான் ஆவியில் உணர்கிறேன்.

எலியா எடுத்துக் கொள்ளப் படுவதற்கு சற்று முன் உனக்கு என்ன வேண்டும்? என்று எலிசாவைப் பார்த்து கேட்கிறார், இந்தக் கேள்வியை உங்களிடமோ, என்னிடமோ கேட்டிருந்தால், நாம் என்ன பதில் சொல்லுவோம் - சொல்லியிருப்போம் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் எலிசா சற்றும் தாமதியாமல் தனக்குள் அக்கினியாய் எரிந்து கொண்டிருக்கும் ஆவலை வெளிப்படுத்துகிறான். ஆவியின் வரம் இரட்டிப்பாய் எனக்கு வேண்டும். இப்படியொரு பதிலை எலியாவே எதிர்ப்பார்த்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன். அரிதானதைக் கேட்டாய் என்று அகமகிழ்ந்தார், அது உன்க்கு கிடைக்கும் என்று அருள்மொழிந்தார்.

விசுவாசிகளே! ஊழியர்களே! நமக்குள் இப்படிப்பட்ட அக்கினி பற்றியெறிய வேண்டும். அதை தேவன் எதிர்பார்க்கிறார், அப்படிப்பட்ட ஆவல் எந்த



உள்ளத்தில் அடக்க முடியாமல் எழும்புகிறதோ அப்படிப்பட்டவர்களை அற்புதங்களை செய்யும் மனிதராக தேவன் மாற்றுகிறார்.

கோபித்துக் கொள்ாதீர்கள், உங்களுக்குள் இருந்து வெளிப்படுகிற பிச்சைக்காரத் தனமான ஜெபத்தை பிய்த்து எறியுங்கள். பெரிய காரியங்களை கேட்கும் விசுவாச வார்த்தைகளை பிடித்துக் கொள்ளுங்கள்.

நமக்கு அருளப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களும், வரங்களும், வல்லமைகளும் எப்படிப் பட்டவைகள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

- என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்த காரியங்களை செய்வான், அவைகளிலும் பெரிய காரியங்களைச் செய்வான்.
- விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன, பிசாசுகளை துரத்துவார்கள், வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.
- அந்த ஆவியினாலே வேறொருவனுக்கு அற்புதங்கள் செய்யும் சக்தியும், வேறொரு வனுக்கு குணமாக்கும் வரங்களும் அருளப் பட்டிருக்கிறது.

இந்த வசனங்கள் மூன்றும் நமக்குதான். நடக்குமா? நடக்காதா? இது தெய்வ சித்தமா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை. இப்படிப்பட்ட கேள்விகள் எழும்புமானால் உங்களை

கொஞ்சம் சரிசெய்ய வேண்டியதே தவிர வேறு வழியில்லை. தேவனுடைய வசனங்களும், வாக்குத்தத்தங்களும் ஆம்! என்றும் ஆமென்! என்றும், என்றென்றும் மாறாதவைகளுமாய் இருக்கிறது.

உண்மையாய் நடந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. இது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக சென்னையிலே நடைபெற்ற சம்பவம். ஒரு வாலிபப் பெண்ணையும் வேலைக்காரியையும் வீட்டிலே விட்டு விட்டு பெற்றோர் எங்கோ வெளியே சென்று விட்டார்கள். அந்த வேளையில் அந்த வேலைக்காரப் பெண், பிசாசு பிடித்து ஆட்டம் போட ஆரம்பித்து விட்டாள். இந்தப் பெண்ணுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்பொழுது முன்னணியில் இருந்த ஒரு சுவிசேஷகருக்கு போன் மூலம் செய்தியை தெரிவித்து அழைத்தாள். அவருக்கோ அவசரமான வேலை. மகளே, நீயே விசுவாசி தானே, மாற்கு 16 : 17 ஐ வாசித்து விட்டு ஜெபி. கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று சொல்லி தொடர்பை துண்டித்துக் கொண்டார்.

இந்த பெண்ணுக்கு அச்சம் இருந்தாலும், அக்கினி பற்றியெறிய ஆரம்பித்து விட்டது. மாற்கு 16 : 17 ஐ உரக்க வாசித்தாள். இயேசுவின் நாமத்தில் போ என்று பிசாசை துரத்த துணிந்து விட்டாள். என்ன ஆச்சரியம், பிசாசு பிடித்தவள் தொப்பென்று கீழே விழுந்துவிட்டாள். பிசாசு ஓடிவிட்டது என்று எண்ணி இவள் மகிழ்ந்து கொண்டிருந்த வேளையில், எதிர்பாராத அதிர்ச்சி அவளுக்கு ஏற்ப்பட்டது. பிசாசு பிடித்தவள் பேச ஆரம்பித்துவிட்டாள்.



நாங்க ஏழு பேரு இருந்தோம். நீங்க சொன்னவுடனே ஒருத்தன் போயிட்டான், மீதி ஆறுபேரு இருக்கிறோம்.

இந்த அறிக்கையை கேட்ட பிறகு அசறவில்லை. அக்கினி பற்றியெறிய ஆரம்பித்தது. அதட்ட, அதட்ட அடுத்து, அடுத்து அசுத்த ஆவிகள் அலறி ஓட அவள் முற்றிலும் விடுதலைப் பெற்றாள்.

இதை நான் குறிப்பிட ஒரு காரணம் உண்டு. எடுத்த எடுப்பிலேயே ஏழு பிசாசுகள் பிடித்த ஒருவளுக்கு விடுதலையை உண்டாக்கியது ஒரு போதகரோ, ஒரு இன்டர்நேஷனல் இவாஞ்சலிஸ்டோ அல்ல. ஒரு சாதாரண விசுவாசியின் மகள். இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது விசுவாசிகளின் சுதந்திரம், இது விசுவாசிகளுக்கான அடையாளம். இது ஆவியைப் பெற்றோருக்கு அளிக்கப்படும் அங்கீகாரம், இதை எல்லா விசுவாசிகளும் பயன்படுத்த வேண்டும். இதைப் பெற்றுக் கொள்ள உங்களுக்கும் எலிசாவிற்குள்ளிருந்த ஆவியின் வரத்தைக் குறித்த ஆவல் அக்கினியாய் பற்றியெறிய வேண்டும்.

இயேசு அப்போஸ்தலர்களை தெரிந்து கொண்டார். அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் காத்திருந்து அபிஷேகம் பெறுகிறதற்கு முன்னரே பிசாசுகளை துரத்தவும், வியாதியஸ்தரை சொஸ்தமாக்கவும் அதிகாரம் கொடுத்தார். நன்றாய் புரிந்து கொள்ளுங்கள். விசுவாசிகளாகிறபொழுது அதிகாரத்தைப் பெறுகிறோம். அபிஷேகத்தைப் பெறுகிற பொழுது வரங்களைப் பெறுகிறோம்.

என்னவானாலும், எப்படியானாலும் கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கிற ஒருவனைக் கொண்டு அற்புதங்களை நிகழ்த்த தேவன் உண்மையுள்ளவர் என்பது வேதம் சொல்லுகிற சத்தியம்.

என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் நடந்த சம்பவம் இது. ஒரு வாலிபப் பெண், திடீரென்று அவளுடைய கைகால்கள் விரைத்துக் கொள்ளும். கழுத்து பக்க வாட்டிற்குத் திரும்பிக் கொள்ளும். கண்கள் சொருகிக் கொள்ளும். அவளுடைய பெற்றோர், சிறந்த நரம்பியல் மருத்தவரிடமெல்லாம் அழைத்து சென்றார்கள் பலனில்லை. கடைசியில் ஜெபவீட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

என்னுடைய மூத்த ஊழியரும், நானும் சில விசுவாசிகளும் சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தோம். மாற்றமில்லை. ஏமாற்றம்தான் கிடைத்தது. எனக்கு அழுகையே வந்துவிட்டது. அவள் சுகம் ஆகாததினால் அல்ல தேவனுடைய வசனம் ஏன்? நம்மூலம் நிறைவேறவில்லையென்பதியாலேயே

எனக்குள் அக்கினிமூள ஆரம்பித்தது. ஆ, ஆண்டவரே எனக்கு குணமாக்கும் வரம் இல்லால் போகலாம், அற்புதம் செய்யும் சக்தி இல்லாமல் போகலாம் ஆனால் மாற்கு 16 : 17 எங்கே? விசுவாசிகளாகிய எங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் எங்கே ? இது பிசாசானால் விலக வேண்டும், வியாதியானால் விடுதலை வேண்டும் என்று ஜெபித்தேன்.

என்ன ஆச்சிரியம் ! அடுத்த சில நிமிடங்களில் அந்த பெண்ணை சிறைப் பிடித்து வைத்திருந்த



அசுத்த ஆவிகள் மூன்று அலறி அடித்துக் கொண்டு வெளியேறின. அவள் அந்த இடத்திலேயே பரிபூரண விடுதலையை பெற்றுக் கொண்டாள்.

பிரியமானவர்களே ! அப்படிப்பட்ட அக்கினி உங்களுக்குள் பற்றியெறிய வேண்டும். எலியா செய்தது போல் எலிசா செய்தார். இயேசு செய்தது போல் இந்தக் கடைசிக் கால சபையாராகிய நாமும் செய்ய முடியும் - செய்ய வேண்டும். ஆவியின் வரத்தைக் குறித்த அக்கினி - ஆவல் நம் ஒவ்வொருவருக்குள்ளும் பற்றியெறிவதாக.

**எலியாவின் நாமமும், மாதிரியும் :**

எலிசா முதல் அற்புதத்தை நிகழ்த்தியதில் ஒரு ஒழுங்கு முறையைக் காண்கிறேன். திரும்பி வந்த அவருக்கு முன்னால் யோர்தானின் வெள்ளப் பெருக்கு திகைப்பை ஏற்படுத்தினாலும், திரும்பிப் போகச் செய்யவில்லை. மாறாக தீர்மானம் எடுப்பதற்கு இங்கே எலிசா செய்த இரண்டு முக்கியமான காரியங்களை கவனித்து பாருங்கள்.

1. எவியாவின் தேவன் எங்கே என்றார் ?

2. சால்வையினால் ஓங்கி (எலியாவின் மாதிரியின் படியே ) அடித்தார். அற்புதம் நிகழ்ந்தது.

1. எலியாவின் நாமம் 2. எலியாவின் மாதிரி, இவை இரண்டும் இணைந்த பொழுது அற்புதம் பிறந்தது. இதிலே நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். நம்மைக் கொண்டு தேவன் அற்புதம் செய்ய வேண்டுமாயின் 1. இயேசுவின் நாமம்

**2.** இயேசுவின் மாதிரி இவைகள் எப்போதும் இணைந்தே இருக்க வேண்டும்.

மாற்கு 16 : 17ல் நான் குறிப்பிடாத ஒரு பகுதியை இப்போது இங்கே குறிப்பிட விரும்புகிறேன். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன, **என் நாமத்தினாலே** பிசாசுகளைத் துரத்துவார்கள். இயேசு என்னும் நாமத்தை நாம் முறையானபடி உச்சரிக்கும் போதும், பயன்படுத்தும் போதும் மாத்திரமே தேவனுடைய அற்புதங்கள் நிகழ ஆரம்பிக்கிறது.

இதைத் தான் ஆவியைப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்களின் முதல் அற்புதத்தில் காண்கிறோம். அலங்கார வாசலண்டையில் இருந்த சப்பாணியைப் பார்த்து, இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று பேதுருவும், யோவானும் சொன்ன போது அற்புதம் அங்கே அரங்கேறியது.

இயேசுவின் நாமத்தை சொல்லுவது மாத்திரமல்ல, இயேசுவின் மாாதிரியின்படியும் நாம் கிரியை செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் நல்ல மாதிரியை இயேசு நம்முன் வைத்திருக்கிறார். வேதத்தில் சொல்லப் பட்டுள்ள இயேசுவின் மாதிரிகளுக்கு மிஞ்சினது ஒன்றுமில்லை. மிஞ்சினது தேவையுமில்லை. நூதன மாதிரிகளையும், நூதன பழக்கங்களையும் கொண்டு வரவேண்டாம். அவைகளுக்கு பின்னால் அஞ்ஞான மார்க்கத்தின் ஆராதனை முறைகளும் அசுத்த ஆவிகளின் ஆளுகைகளும் இருக்கிறது என்பதை உணருங்கள்.



இப்பொழுது நான் எழுதப் போகிற சில காரியங்கள் சங்கடத்தையும், சந்தேகத்தையும் உங்களுக்கு கொண்டுவரும் என்பதை நான் அறிவேன். ஆனாலும், சத்தியத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் சந்தோஷத்தோடே இதை எழுதுகிறேன்.

ஜெப எண்ணெய் என்று ஒன்று கிடையாது. இது இயேசுவின் மாதிரியோ, வேதத்தின் மாதிரியோ கிடையாது. எண்ணெய்க்கு ஜெபம் பண்ண சொல்லி இயேசுவோ, அப்போஸ்தலரோ நமக்குப் போதிக்கவில்லை.

யாக்கோபு 5 :14ஐ கவனித்துப் பாருங்கள். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப்பரை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி **அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள்.** இந்த வசனத்தின்படி எண்ணெயைப் பூசி அவனுக்காய் ஜெபிக்க வேண்டுமே தவிர, எண்ணெய்க்கு ஜெபம் பண்ணி அவன் மேல் பூசக்கூடாது.

எண்ணெய் மந்தரித்துக் கொடுப்பது, தண்ணீர் மந்தரித்துக் கொடுப்பது, சாரி சாரி **(Sorry)** ஜெபம் பண்ணிக் கொடுப்பது இயேசுவின் மாதிரி அல்ல.

இப்படிச் செய்தால் அற்புதம் நடக்கிறதே? அது எப்படி? என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது. எண்ணெயினாலோ தண்ணீரினாலோ அங்கு அற்புதம் நடக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் விசுவாசத் தினாலும், அவர்கள் மேலுள்ள தேவனுடைய மனதுருக்கத்தினாலுமே அற்புதங்கள் நிகழுகிறது.

கன்மலையை மோசே இரண்டாம் விசை அடித்தது தவறான செயல். அவனது தவறான செயலுக்காக தேவன் சும்மா இருந்துவிடாமல் தாகமுள்ள ஜனங்களுக்காக தேவன் தம்முடைய அற்புதத்தை நிகழ்த்தினார் என்ற பழைய ஏற்பாட்டு சம்பவத்தை நான் சொன்ன மேற்கண்ட காரியத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

சரி விஷயத்திற்கு வருவோம். எலிசா அடுத்தடுத்து அற்புதங்களை நிகழ்த்தினார். அந்த அற்புதங்களினால் கர்த்தர் மகிமைப்பட்டார். எலிசாவை எவரும் மகிமைப்படுத்தவில்லை.

எலியா, கர்த்தரே தெய்வம் என்று தேசம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மாபெரும் அற்புதத்தை நிகழ்த்தினார். அற்புதத்தைக் கண்ட மக்கள் எலியா வாழ்க! வாழ்க! என்று முழங்கி அவரை (கதா) நாயகனாக மாற்றவில்லை. மாறாக "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" என்று கதறினர்.

இப்படிப்பட்ட நல்ல குருவிடம் பாடம் படித்த எலிசா எந்தவித சுயமகிமையையும் தேடாமல், எல்லா இடங்களிலும் தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தினபடியால் தான், அவருடைய எலும்புகள் கூட அற்புதங்களை நிகழ்த்தியது.

நம்முடைய குருநாதராகிய கிறிஸ்து எல்லா இடங்களிலும் பிதாவை மகிமைப்படுத்தினார். நம்முடைய துணையாளராகிய பரிசுத்த ஆவியானவரும் தம்மை மகிமைப்படுத்திக் கொள்ளாமல் பிதாவையே மகிமைப்படுத்துகிறார்,



மகிமைப்படுத்துகிறார். அப்படியானால் நாமும் சுய மகிமையைத் தேடாமல் தேவனுடைய நாமம் மகிமைப் படும்படியான கிரியைகளை நடப்பிக்க வேண்டும்.

கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக இயேசுவின் நாமத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, இயேசுவின் மாதிரியை பின்பற்றுகிற எந்த மனிதனைக் கொண்டும் அற்புதங்களை நிகழ்த்த தேவன் உண்மையுள்ளவர். அப்படிப்பட்ட கூட்டத்தில் நீங்களும் ஒருவராக மாற முடியும் - மாறுவீர்கள்.

# 4

# ஆவிக்குரிய மனிதன்

எலிசாவின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக வாசித்துப் பார்த்தால் அவர் ஒரு ஆவிக்குரிய மனிதனாக வாழ்ந்தார் என்பது தெளிவாகப் புரிகிறது. அற்புதங்கள் செய்யும் மனிதனை விட ஆவிக்குரியவனாக நடந்து கொள்கிற மனிதனே உன்னதமானவன்.

நீங்கள் அற்புதம் செய்கிறவர்களாக இல்லாமல் போகலாம். ஆனால் ஆவிக்குரியவர்களாக இருந்தேயாக வேண்டும். சிலர் அற்புதங்களை வெகு நேர்த்தியாக நிகழ்த்துகிறார்கள். ஆனால் அவர்கள் முடிவு பரிதாபமாக போய்விடுகிறது. அதற்கு காரணம் ஆவியின் வரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள், ஆவியின் கனிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் போனதே. எவிசாவின் வாழ்வில் ஆவிக்குரிய மனிதனாக அவர் திகழ்ந்ததை வெளிப்படுத்திக் காட்டும் சில அனுபங்களை படம் பிடித்து காட்ட விரும்புகிறேன்.

***1. பரிசுத்தவான் :*** எலிசா, சூனேம் ஊரிலுள்ள ஒரு வீட்டிற்கு அடிக்கடி வந்து போனான், அந்த வீட்டு அம்மா தன்னுடைய கணவனிடம் சொன்ன அறிக்கையை சற்று கவனித்துப் பாருங்கள். இதோ நம்மிடத்தில் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன் (II இராஜா 4:9). எவ்வளவு அற்புதமான சாட்சி



பார்த்தீர்களா? ஒரு வீட்டிற்கு ஒரு முறை சென்று பரிசுத்தவான் என்று பட்டம் வாங்குவது எளிது. ஆனால் பலமுறை சென்ற பிறகு பரிசுத்தவான் என்ற சாட்சியை காத்துக் கொள்வது அரிது. ஒரு பெண்ணிடம் இப்படிப்பட்ட சாட்சியை பெற்றுக் கொள்வது எவ்வளவு பெரிய பாக்கியம்.

சில பரிசுத்தவான்கள் வெள்ளை உடை அணிந்து கண்களை மூடி பக்திப் பரவசத்தில் மூழ்கி பரிசுத்தவான் என்ற பட்டத்தை படு ஜோராக பெற்று விடுவார்கள். ஆனால் நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டால் நேச (நாச) வலை வீசி படுபாதாளத்தில் தள்ளி விடுவார்கள்.

ஒரு நரி காட்டை விட்டு நாட்டுப் பக்கம் சென்று சாயத்தொட்டிக்குள் விழுந்து விட்டதாம். வண்ண மயமான கோலத்துடன் வனத்திற்குள் நுழைந்த அது வானத்திலிருந்து வந்த அரசன் நானே என்று வார்த்தைகளாலே அச்சுறுத்தியதாம். அச்சம் கொண்ட சிங்கம் அரசப் பதவியை அதற்கு விட்டு கொடுத்து விட்டதாம். அஃதினை கண்ட கிழநரி ஒன்று இஃதென்ன, நம்மைப் போலத் தான் இருக்கிறது. ஆனால் வேஷமும், கோஷமும் வித்தியாசமாக இருக்கிறது. விவரத்தைக் கண்டறியவேண்டும் என்று விரைவாய் செயல்ப்பட்டது.

நுறு நரிகளை சேர்த்துக் கொண்டு புதிய ராஜாவுக்கு வாழ்த்துப் பாட, ஒரே சமயத்தில் ஊளையிட்டனவாம். ராஜ வேஷத்திலிருந்த நரி மெய் மறந்து விட்டது, தாக்குப் பிடிக்க முடியவில்லை. அதுவும் ஊளையிட ஆரம்பித்து விட்டது. அப்பொழுதே கலைந்தது அஃதின் வேஷம், ஆத்திரம் கொண்ட சிங்கம்

அஃதினை ஓங்கி அறைந்தது. அதுவோ உலகத்தை விட்டே மறைந்தது.

இன்றைக்கு பல பரிசுத்தவான்களின் நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது. வேஷமும் கோஷமும் படு ஜோராக இருக்கிறது. ஆனால் குடும்பத்தில், குடும்ப விழாக்களில் இவர்கள் பேசும் வார்த்தைகளை கேட்கும் போது ஊரே திகைத்து நிற்கிறது.

எனக்கு ஒரு ஊழியரைத் தெரியும். வெகு அழகாக பிரசங்கிப்பார். நுறு வாட்ஸ் ஆம்பளிபயரை விழுங்கி விட்டது போல, மகா சத்தமாய் பிரசிங்கிப்பார். பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தூதனைப் போல படு பவ்வியமாக முகத்தை வைத்துக் கொள்வார். ஆனால் பிரசங்கம் முடிந்து வீட்டிற்குப் போனால் அவர் மனைவியைப் புரட்டி எடுத்து விடுவார். அத்தோடு நின்று விட மாட்டார். அவர் மனைவியின் அப்பா, அம்மா, அண்ணன், தங்கை அனைவரையும் வறுத்துக் கொட்டி விடுவார். பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம், காதையும் அடைத்துக் கொள்வார்கள் - கதவையும் அடைத்துக் கொள்வார்கள்.

அய்யா என் கணவரை பிரசங்க பீடத்தின் மேலேயே வைத்து போல்ட் நட் போட்டு இணைத்து விடுங்கள். பிரசங்கிக்கும் போது அவர் தேவ தூதன், பிரசங்க பீடத்தை விட்டு இறங்கி விட்டால் பிசாசின் தூதன் என்று அந்த ஊழியரின் மனைவி என்னிடம் சொன்ன போது, எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?



அன்பான ஊழியரே! விசுவாசிகளே! உங்கள் வாழ்க்கைத் துணை நீங்கள் ஒரு பரிசுத்தவான் என்று சாட்சி கொடுக்க முடியுமா? உங்கள் பிள்ளைகள் உங்களைக் குறித்து பரிசுத்தவான் பரிசுத்தவாட்டி என்று சாட்சி கொடுக்க முடியுமா? சற்று யோசித்துப் பாருங்கள்.

மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்றும், யோபு தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிற மனுஷன் என்றும், என் பரிசுத்தனாகிய ஆரோன் என்றும், தேவன் தம்முடைய தாசர்களைக் குறித்து சாட்சி சொன்னாரே, அப்படிப்பட்ட சாட்சியை தேவன் உங்களுக்குத் தருவாரா? சற்று யோசித்துப் பாருங்கள்.

என் இளம் வயதிலே அநேக பரிசுத்தவான்களின் பாதத்தில் அமர்ந்து, சத்தியங்களை கற்றுக் கொண்டேன். ஒரு தெய்வ மனிதர் எனக்கு சொல்லிக் கொடுத்த பாடம் அவர் மகிமைக்குள் பிரவேசித்து விட்ட பின்னும், இன்று சொல்வது போல என் கண் முன் நிற்கிறது.

சூனேம் ஊராளின் மகன் மரித்துப் போனான். அந்தப் பிள்ளையை உயிரடையச் செய்யும்படி தனது தடியைத் தன் வேலைக்காரனிடம் கொடுத்தனுப்புகிறான். அவன் வரவேண்டாம் நீர் தான் வரவேண்டும் என்று சூனேமியாள் எலிசாவிடம் அடம் பிடித்தாள். அது ஏன்? ஆனாலும் அந்த வேலைக்காரன் முன்னே ஓடி தடியை பிள்ளையின் மேல் வைத்தான். அற்புதம் ஏதும் நிகழவில்லை. அது ஏன்? என்று அந்தப் பரிசுத்தவான் என்னைக் கேட்டார். எனக்கு பதில் ஏதும் சொல்லத் தெரியவில்லை. திரு திரு வென விழித்தேன்.

அவரே பதிலைச் சொன்னார். எலிசா எப்போதும் தன்னுடைய வேலைக்காரனோடேயே சூனேம் சென்றார். ஆனால் பரிசுத்தவான் என்று சாட்சி பெற்றது எலிசா மட்டும் தான்.

நன்றிக் கடனைத் தீர்ப்பதற்காக சூனேமியாளை அழைத்து உனக்கு என்ன வேண்டுமென்று எலிசா கேட்கிறார். அவளோ எனக்கு ஒரு குறையுமில்லை என்று சொல்லிவிட்டாள். எலிசா விடவில்லை. இவளுக்கு என்ன தேவை என்று தன் வேலைக்காரனிடம் கேட்கிறான். இவளுக்கு குழந்தை இல்லை என்று பளிச்சென பதில் சொல்லிவிட்டான்.

என்ன ஆச்சரியம்! எலிசாவுக்கு தெரியாத ஒரு இரகசியம் வேலைக்காரனுக்குத் தெரிந்து விட்டது. எவ்வளவு பெரிய வெளிப்பாடு என்று ஆச்சரியப்படாதீர்கள். எலிசா மேல்வீட்டில் இருக்கும் போது, வேலைக்காரன் கீழே வந்து வெட்டிக் கதை பேசியிருக்கிறான். அப்போது தான் இந்த விவரங்களைப் பெற்றிருக்கிறான். பேசிப் பேசியே தன்னுடைய உயர் ஸ்தானத்தை இந்த வேலைக்காரன் இழந்து போனான். இவன் பேச்சை வைத்தே சூனேமியாள் இவன் போனால் நம்முடைய மகன் பிழைக்க மாட்டான் என்று எண்ணி எலிசாவே வர வேண்டும் என்று அவள் அழைத்தாள், அழுதாள்.

இப்படி ஒரு விளக்கத்தை அந்த பரிசுத்தவான் சொன்ன போது ஆச்சரியப்பட்டேன். ஆம்! கவனமாயிருங்கள், ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். சொற்களின் மிகுதியில்



பாவமில்லாமற் போகாது என்று வேதம் சொல்லும் சத்தியம் உண்மையானது. மறந்து விடாதீர்கள்.

உங்கள் அலுவலகத்தில், கல்லூரியில் மற்றவர்களிடத்தில் பேசும் பொழுது குறிப்பாக எதிர்பால் இனத்தாரிடத்தில் பேசும் போது, அளந்து பேசுங்கள் அவசியமானதைப் பேசுங்கள். தாவீதைப் போல என் உதடுகளுக்கு காவல் வையும் என்ற ஜெபம் உங்கள் சுவாசத்தில் எப்போதும் கலந்திருக்கட்டும், அப்பொழுது நீங்கள் பரிசுத்தவான்களாய் இருப்பீர்கள்.

இவைகளெல்லாவற்றிலும் யோபு தன் உதடு களினால் பாவஞ் செய்யவில்லை என்ற வேதப் பகுதி என்னை அடிக்கடி உஷார்படுத்தும். கிரியைகளை விட நம்முடைய பேச்சுக்கள் வெகு அதிகமாக நம்முடைய பரிசுத்தத்தைக் கெடுத்து விடும். மனுஷர் பேசுகிற வீணான வார்த்தைக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று மாத்திரமல்ல, உள்ளேயிருந்து வெளியே போகிறவைகளே (வார்தைகளே) மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்று வேதம் போதிக்கிறதை மனதில் நிறுத்தி தீட்டுள்ள தொன்றும் உள்ளே பிரவேசியாத தேவ ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி ஆயத்தப்படுங்கள்.

**2. சாட்சியுள்ளவன்** : எலியா சுழல் காற்றில் பரலோகத்திற்கு ஏறிப் போனான். அப்பொழுது எலிசா, என் தகப்பனே, என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரனுமானவனே என்று புலம்பல் பாடினான். பல ஆண்டுகள் கழித்து எலிசா வியாதிப்படுகிறான்.

அப்பொழுது தேசத்தின் இராஜா புலம்பல் பாடுகிறான். என்ன ஆச்சரியம்! எலியாவிற்கு எலிசா என்ன புலம்பல் பாடினாரோ அதே புலம்பலை இராஜா பாடுகிறான், யோவாஸ் அவனிடத்திற்குப் போய் அவன் மேல் விழுந்து, அழுது **"என் தகப்பனே என் தகப்பனே இஸ்ரவேலுக்கு ரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே என்றான்"** (II இராஜா 13 :14) எவ்வளவு அற்புதமான சாட்சி பார்த்தீர்களா? **A .** தகப்பனானவன் **B.** இரதமுமானவன் **C.** வீரனுமானவன் - எலியா எடுத்துக் கொள்ளப்படுகிற பொழுது பெற்ற அதே சாட்சியை எலிசா படுத்துக் கொண்ட பொழுது பெற்றுக் கொண்டார்.

ஆவிக்குரியவனைக் குறித்து சபையார் சாட்சிக் கொடுக்க வேண்டும். அத்தோடு நின்று விடக்கூடாது. சமுதாயமும் சாட்சி கொடுக்க வேண்டும்.

எலிசாவிற்குத்தான் எத்தனை சாட்சிகள் பாருங்கள். **தேவனுடைய மனுஷன்**- இது சூனேமியாளின் சாட்சி, **என் ஆண்டவனே**- இது தீர்க்கதரிசிப் புத்திரர்களின் சாட்சி, சமாரியாவில் இருக்கிற **தீர்க்கதரிசி** -இது சீரியா தேசத்திற்கு போன சிறு பெண்ணின் சாட்சி, **இரதமும் குதிரை வீரனுமானவன்** - இது இராஜாவின் சாட்சி, **என் எஜமான்** - இது வேலைக்காரனின் சாட்சி. இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

உங்களைக் குறித்து உலகம் என்ன சாட்சி கொடுக்கும். சாட்சி இல்லா கிறிஸ்தவன் சவத்திற்கு சமமானவன். நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள்



(லூாக்24:48) பரிசுத்தாவி வரும் போது நீங்கள் பெலனடைந்து.... சாட்சிகளாயிருப்பீர்கள் (அப் 1:8) என்று இயேசு சொன்னதை எண்ணிப்பாருங்கள்.

இயேசுவுக்காக சாட்சி சொல்ல வேண்டும், இயேசுவுக்காய் சாட்சியாய் வாழ வேண்டும்.

தேமேத்திரியு 1.எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல். 2.சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன். 3. நாங்களும் சாட்சி கொடுக்கிறோம் (III யோவான் 12). மூன்று விதமான சாட்சியைப் பாருங்கள். சபையாரிடத்திலும், சமுதாயத்திலும் (எல்லேரிடத்திலும்) சாட்சி பெறுதல். இரண்டாவது சத்தியத்தால் - இதை விசாலமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1. சத்தியமாகிய கிறிஸ்து 2.சத்திய ஆவியானவர் 3. சத்திய வசனம். உங்களைக் குறித்து சாட்சி கொடுக்க வேண்டும்.

கபடற்ற உத்தம இஸ்ரவேலன், இது இயேசுவின் சாட்சி. ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக தேவனிடத்தில் சாட்சி பெற்றான் (எபி 11:5). இப்படிப்பட்ட தெய்வீக சாட்சிகளை விசுவாசிகள் கொண்டிருக்க வேண்டும்.

என்னிடத்தில் இருப்பவர்கள் விசுவாசிகள் அல்ல, விஷ ஊசிகள் என்று ஒரு போதகர் கண்ணீரோடு சொன்னது என் கண் முன்னால் நிற்கிறது. (III யோவான் 9) தியோத்திரேப்பு என்பவனைக் குறித்து சொல்லும் பொழுது (1) எங்களை ஏற்றுக் கொள்ளாதவன் (2) எங்களுக்கு விரோதமானவன் (3) பொல்லாத வார்த்தைகளை அலப்புகிறவன் (4)

ஏற்றுக் கொள்கிறவர்களை தடை செய்கிறவன்.(5) சபைக்கு புறம்பே தள்ளுகிறவன் என்று கண்ணீர் மல்க சாட்சி கொடுக்கிறார்.

நீங்கள் உங்கள் சபைக்கு தியோத்திரேப்புகளாக இல்லாமல் தேமேத்திரியுக்களாக இருக்கும்படி பாருங்கள். எலிசா இன்றளவும் போற்றப்படுவதற்கு காரணம் தெய்வ ஜனத்தின் மத்தியிலும், தேசத் தலைவர்கள் மத்தியிலும், புற ஜாதிகளின் மத்தியிலும் அவர் பெற்றிருந்த சாட்சிகளே. சாட்சி சொல்லுவோம், சாட்சியாய் வாழ்வோம்!

**3.மன்னிக்கிறவன் :** மன்னிப்பு என்ற வார்த்தை மிகவும் உன்னதமான வார்த்தை. நம்முடைய அருமை இரட்சகர் சிலுவையில் தொங்கின போது சொன்ன முதலாவது வார்த்தையாகிய "பிதாவே இவர்களை மன்னியும்". இன்றளவும் எல்லோராலும் தியானம் பண்ணப்படுகிற அதி உன்னதமான வேத பகுதியாகும்.

இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற ஆவிக்குரிய கிறிஸ்தவன் இந்த மன்னிக்கும் சுபாவத்தை உடையவனாய் இருக்க வேண்டும். தேவன் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே மற்றவர்களுக்கு நீங்கள் செய்யுங்கள் என்று வேதம் போதிக்கிறப்படி, தெய்வத்தினிடத்தில் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி மற்றவர்களை மன்னிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

எலிசாவின் ஊழிய ஆரம்ப காலத்தில் அவனை பரிகாசம் பண்ணின பிள்ளைகளை சபித்தான் என்றும், அதினிமித்தம் கரடிகள் அந்தப் பிள்ளைகளை பீறிப் போட்டது என்றும் வாசிக்கிறோம்.



ஆனால் ஆவிக்குள் அவர் வளர, வளர அவருடைய சுபாவம் திவ்விய சுபாவமாக மாறியது. அதைக் குறித்த ஒரு வேத சம்பவத்தை கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

சீரியா தேசத்தின் தண்டுகள் தோத்தான் என்னும் இடத்தில் இருந்த எலிசாவை சுற்றி வளைத்துக் கொண்டார்கள். ஆனாலும் கர்த்தர் எலிசாவோடு இருந்தபடியால் நூதனமான குருட்டாட்டத்தின் ஆவி அவர்களைப் பிடித்துக் கொண்டது. அவர்கள் எலிசாவினிடத்தில் வந்த போது அவர் அவர்களை சமாரியாவின் இராஜாவிற்கு முன்பாக அழைத்துக் கொண்டு போய் நிறுத்தி, அவர்கள் பார்க்கும்படி கண்களை திறந்து விட்டார். அவர்கள் தப்பிக்க முடியாதபடி சிக்கிக் கொண்டார்கள். இஸ்ரவேலின் இராஜா அவர்களைக் கொன்று போட துடிக்கிறார். இந்த நேரத்தில் எலிசா நடந்து கொண்ட விதம், அவர் ஆவிக்குரியவர் என்பதை நிரூபித்துக் காட்டுகிறது.

அவர்களை கொன்று போடுவதற்கு எல்லாவித வசதியும், வாய்ப்பும் இருந்த போதும் அப்படிச் செய்யாமல் இராஜாவின் மூலம் சிறந்த விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து அவர்களை பாதுகாப்போடு சொந்த தேசத்திற்கு அனுப்பி வைக்கிறார். அவர்கள் போனவர்கள் போனவர்கள்தான், அதன் பின் சீரியா தேசத்தின் தண்டுகள் வரவேயில்லை (II இராஜா 6)

ஒரு நீண்டகால யுத்தமில்லாத சூழ்நிலைக்கு எது காரணம்? யார் காரணம்? என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். காரணம் எலிசாவும் அவருடைய மன்னிக்கும் சுபாவமுமே. எலிசா ஒரு வேளை பிடிபட்ட சீரியா தேசத்து தண்டுகளை அடித்தோ

அல்லது அங்கங்களை அகற்றியோ அனுப்பியிருந்தால் ஆத்திரம் கொண்டு சீரியா தேசத்தின் இராஜா ஆட்களோடும், ஆவேசத்தோடும் புறப்பட்டு வந்திருப்பான். ஆனால் எலிசாவின் மென்மையான, மேன்மையான அணுகுமுறையினால் எதிராளிகள் எழும்ப முடியாமல் செய்து விட்டான்.

நம்முடைய குடும்பத்திலும், ஊழியத்திலும் அந்த மென்மையான அணுகுமுறையை கையாளுவோமானால் வன்மையான அணுகுண்டுகளையும் செயலிழக்கச் செய்து விடலாம். நம்முடைய இரட்சகர் சொல்லித் தந்த பரமண்டல ஜெபத்தைக் கவனித்துப் பாருங்கள். எங்கள் எதிராளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்ற வாசகம் எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ளதாய் இருக்கிறது. கிறிஸ்துவத்தின் மிகப்பெரிய உபதேசம் இந்த மன்னிப்புதான்.

இந்த புத்தகத்தை நான் எழுத ஆரம்பித்த பொழுது கடுமையான வியாதிக்குள்ளானேன். உழைப்பது மாத்திரமல்ல, பிழைப்பதே அரிது என்று மருத்துவ அறிக்கைகள் கூறின. அநேகப் பரிசுத்தவான்கள் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் என்னை அற்புதமாக, அதிசயமாக நடத்தினார். நான் தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொண்டதற்கு பல காரணங்கள் உண்டு. முதல் காரணம் மன்னிப்புதான்.

யார், யார் என்னால் மனவேதனை அடைந்தார்களோ அவர்கள் எல்லோரிடத்திலும் மன்னிப்புக் கேட்டேன். அது எனக்கு திருப்தியாக இருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னை வேறு



விதமாக நடத்தினார், யார் யார் எனக்கு விரோதமாக எழும்பி என்னைத் துக்கப்படுத்தினார்களோ அவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கும்படி உணர்த்தினார்.அப்படிப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்லி சொல்லி தெய்வ சமூகத்தில் மன்னித்து ஆசீர்வதித்து என் மனதின் ஆழத்தில் இருக்கிற கசப்புகளை வெளியேற்றினேன். அந்த நிமிடத்தில் இருந்து தெய்வீக சுகம் மாத்திரமல்ல, இதுவரை நான் அடைந்திராத தெய்வ கிருபையும் என்னில் துளிர்விட ஆரம்பித்து விட்டது.

பவுலுக்கும், பர்னபாவுக்குமிடையில் கடும் கோபமும், வாக்குவாதமும் ஏற்ப்பட்டது. யார் நிமித்தம் தெரியுமா? ஏன் தெரியுமா? மாற்குவை உடன்அழைத்து செல்ல வேண்டுமென்பது பர்னபாவின் ஆசை. பவுலோ அதை எதிர்த்தார். அது பிரிவினையாகி பர்னபாவும் மாற்கும் ஒரு பக்கமும், தனித்து நின்ற பவுல் சீலாவை அழைத்துக் கொண்டு இன்னொரு பக்கம் போனார்கள். இது ஆரம்ப கால அனுபவம்.

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைந்த பவுலின் பிந்தின அறிக்கை என்ன தெரியுமா? மாற்குவை அழைத்து கொண்டுவா அவன் எனக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவன். இதுதான், மன்னித்து மறக்கும் சுபாவம்.

அறிஞர் அண்ணா அவர்கள் மறப்போம் மன்னிப்போம் என்ற அழகான சொற்றொடரை அறிமுகப்படுத்தினார். உலக மனிதர்களுக்கே அந்த உன்னதமான சிந்தை இருக்குமானால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய

அன்பு நமக்கு ஊற்றப் பட்டிருக்கிறதே, நாம் எவ்வளவு உன்னதமாய் உத்தமமாய் சிந்திக்க வேண்டும்.

பிரியமான வாசகரே ! நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிலே ஓடவும், அற்புதங்களின் மனிதனாக வாழவும் ஆவியானவர் விரும்புகிறார். அதற்காக நீங்கள் பரிசுத்தமும், சாட்சியும், மன்னிக்கும் சுபாவமும் உள்ள ஆவிக்குரியவராக நிலை நிற்க வேண்டுமென்று ஆவியானவர் விரும்புகிறார். ஆவியானவர் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்.

# 5

# அடக்கமுள்ள மனிதன்

எலிசா உண்மையிலேயே ஒரு விந்தையூட்டும் மனிதன். தன் வழிகாட்டியாகிய எலியாவைவிட இரட்டிப்பான வரம் பெற்றவன். தன் சமகால தீர்க்க தரிசிகள் யாவரையும் விட திறன் மிக்கவன் மட்டுமல்ல மரித்தபிறகும் அற்புதம் செய்தவன். இப்படிப்பட்ட மேன்மைகளுக்கு அப்பால் மற்றுமொரு சிறப்பை அவரில் காண்கிறேன். அது அவரது அடக்கம், அதாவது அவரது தாழ்மை.

தன் பணத்தைக் குறித்தும், தன் அழைப்பைக் குறித்தும், தன் வரத்தைக் குறித்தும் மேன்மை பாராட்டாத குணக்குன்று எலிசா என்பது உண்மை.

எலியா அவரை இந்த கனமான ஊழியத்திற்கு அழைப்பதற்கு முன்னால் சொந்தமான விளை நிலமும், ஏர்மாடுகளும் வைத்திருந்த மிக உயர்வான நிலக்கிழார் என்பது வேதம் தருகிற ஆதாரம். ஆனால் என்ன ஆச்சரியம் இவர் வாளாயிராமல் ஏர்பூட்டி உழுது கொண்டிருந்தாராம். அதுவும் முதலாவது ஏரையல்ல 12வது ஏரை பூட்டி கடைசியில் உழுது கொண்டிருந்தார்.

எவ்வளவு தாழ்மையான குணம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இந்த தாழ்மைதான் எதிர்கால ஸ்திரமான ஊழியத்திற்கு உரமாக அமைந்தது.

தமிழ்நாட்டில் இந்த உழவைக் குறித்து ஒரு நல்ல பழமொழி உண்டு. "முன் ஏர் போவது போலவே பின் ஏரும் செல்லும்". அதவாது முன்னால் செல்லுகிற ஏர்தான் வழிகாட்டி. அந்த வழியில்தான் பின்னால் வருகிற ஏர்கள் செல்ல வேண்டும், செல்ல முடியும். தான் நிலத்தின் சொந்தக் காரராக இருந்த போதும் தனக்குப் பின்னால் தான் மற்றவர்கள் வர வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் மற்றவர்கள் நடத்திப்புக்கு இசைந்து பின் செல்லும் இயல்பு எலிசாவிடம் சற்று கூடுதலாகவே இருந்தது.

இதை விசுவாசிகளும், வளரும் ஊழியர்களும் சிந்தையில் வைக்க வேண்டும். மற்றவர்கள் நடத்திப்புக்கு இணங்க இசையாமல், மற்றவர்களை நடத்த இறங்குவதால்தான்,நம்மில் பலர் நலிந்தும் மெலிந்தும் போகிறோம். அதை விடுத்து ஏற்ற காலத்தில் உயர்த்தப்படும் படிக்கு நம்மை நடத்துகிறவர்களுக்கு மனப்பூர்வமாக அடங்கி இருப்போமானால் எவராலும் அசைக்க முடியாத உயர்ந்த இடத்தை கர்த்தர் அருள்வார்.

ஒரு இனிய சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. படிக்கும் காலத்தில் தேசிய மாணவர் படையில் அங்கமாக இருந்தேன். பயிற்சியின் போது வரிசையில் முதல் ஆளாக நான்தான் நிற்பேன். பயிற்சியின் போது நடைபோடுவேன். சாப்பாட்டு நேரம் வரும்போது எனது ஆணையாளர் (காமாண்டர்) அபவுட்டேன் என்பார். எல்லாரும் திரும்புவர். என்ன நடக்கும் தெரியுமா? முதல் ஆளாக நின்று கொண்டிருந்த நான் கடைசி ஆளாக மாறிப் போவேன். கடைசி ஆள் முதல்



ஆளாக மாறிப் போவார். ஒவ்வொரு முறையும் இப்படித்தான் நடக்கும். அப்போது இதிலிருந்து நான் ஒன்றையும் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நான் ஊழியத்திற்கு வந்த பிறகு இந்த பழைய சம்பவம், அரிய பாடத்தை எனக்கு புரிய வைத்தது.

நான் ஊழியத்திற்கு வந்த பிறகு முதல் இடத்தில் நிற்பதை தவிர்த்தேன். கடைசியில் நிற்க கற்றுக் கொண்டேன். கடைசியில் நின்றதினால் நான் காணாமல் போய்விடவில்லை. மற்றவர்கள் காண்கிறபடி தேவன் என்னை உயர்த்தியிருக்கிறார்.

பிரியமானவர்களே! தாழ்மையை தரித்துக் கொள்ளுங்கள். பெருமை இருக்கிறதே அது மகா மோசமானது, கொலை ஆயுதம். அது மற்றவர்களை கொல்லாது, அது உடையவர்களையே கொன்று விடும், கவனமாய் இருங்கள்.

நெபோபுளாசார் ஒரு சாதாரண ராஜா. அவனுடைய குமாரரானாகிய நேபுகாத்நேச்சாரை தேவன் தம்முடைய திருவுளச் சித்தத்தின்படி தாம் உரைத்த தீர்க்க தரிசனத்தின்படி எருசலேமுக்கும், யூதருக்கும் விரோதமாக எழும்புவதற்கு அனுமதித்தார். அந்நாளில் அவன் அரசு பேரரசாக வளர்ந்தோங்கியது.

ஆனால் அவனோ தாழ்மைச் சிந்தைக்கு பதிலாக அகந்தை கொண்டான். தான் கட்டின பாபிலோன் பட்டணத்தைப் பார்த்து **என்** பராக்கிரமத்தினால் **என்** மகிமையின் பிரஸ்தாபத்திற்கென்று **நான்** கட்டின மகா பாபிலோன் என்று சொன்னான் *(தானி 4:30)*

இந்த வார்த்தை (என், நான்) இராஜாவின் வாயிலிருக்கும் போதே தேவன் அவனை அடித்தார். அவன் மிருகம் போலானான். வேண்டியவைகளுக்கு மிஞ்சி எண்ணுகிறவர்களுக்கு இது ஒரு சரியான எச்சரிப்பு.

தாழ்மையுள்ளவர்களுக்கு கிடைத்த பாக்கியத்தைப் பாருங்கள். உன்னதமான உக்கிராணத்துவத்தை தேவன் அவன் கையிலே கொடுக்கிறார். யோவான் ஸ்நானனைப் பாருங்கள், "இயேசுவின் பாதரட்சையின் வாரை அவிழ்க்கக் கூட பாத்திரன் அல்ல" என்று தன்னைத் தாழ்த்தினார். இவர் கையில் தான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்ற மிகப்பெரிய உக்கிராணத்துவத்தை தேவன் தந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுலைக் கவனித்துப் பாருங்கள். கிரேக்க மொழியிலும், யூத சித்தாந்தத்திலும் சிறந்த படிப்புப் பெற்று இக்கால டாக்டர் பட்டத்திற்கு சமமான அந்தஸ்த்தைப் பெற்றிருந்தவர். ஆனால் அவரோ அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன் என்றும், அகாலப் பிறவி போன்றவன் என்றும் தன்னைத் தாழ்த்தினார்.

அவருக்கு விசேஷமான கிருபைகளை தேவன் கொடுத்திருந்தார். எல்லோரும் மரித்த பின் பரதீசுக்குப் போவார். இவரோ உயிரோடு இருக்கும் போதே மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டு பரதீசுக்கும் சென்று திரும்பியவர். இக்கால ஊழியர் என்றால் பரலோகம் சென்று வந்த பவுல் என்று நோட்டீஸ் அடித்து விநியோகித்திருப்பர். ஆனால் பவுலோ இந்த மேன்மையான அனுபவத்தை எழுதுகிற போது தப்பித்தவறி கூட தன் பெயரைக்



குறிப்பிடாமல் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு மனிதனை அறிவேன் என்று அடக்கத்துடன் எழுதியிருக்கிறார்.

அதனால் தான் புறஜாதிகளின் சபையைக் கட்டி எழுப்புகிற உக்கிராணுவத்தையும், புதிய ஏற்பாட்டின் அதிக ஆகமங்களை எழுதுகிற சிலாக்கியத்தையும் தேவன் பவுலுக்கு கொடுத்தார்.

இப்படியே எலிசா தன்னை தாழ்த்தின படியால் தான் மிகச்சிறப்பான ஒரு ஊழியத்தை கர்த்தர் அவர் கையிலே கொடுத்தார்.

திடீரென்று ஒரு நாள், எலியா எலிசாவிடம் வந்து சால்வையைப் போர்த்துகிறார். என்னால் வர இயலாது என்றோ அல்லது சற்று பொறும் என் பெற்றோரைப் பார்த்து முத்தம் செய்துவிட்டு வருகிறேன் என்றோ எலிசா பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்த நேரத்தில் எலிசா நடந்து கொண்ட விதத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

"அப்பொழுது அவன் மாடுகளை விட்டு எலியாவின் பிறகே ஓடி நான் என் தகப்பனையும், தாயையும் முத்தம் செய்ய உத்தரவு கொடும்", பார்த்தீர்களா! எலியா சால்வை விரித்த அந்த நிமிஷத்திலேயே தன்னை எலியாவுக்கு அடிமையாக எலிசா ஒப்புக்கொடுத்தான். அதனால் தான் எந்த நிலையிலும் அவரால் மனரம்மியமாகவும் மனம் தளராமலும் இருக்க முடிந்தது.

எலிசாவினுடைய தாழ்மைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று இயல்பான மனத்தாழ்மை,

மற்றொன்று தன்னை நடத்துகிறவர்களுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துதல்.

பிரியமானவர்களே! உங்களை நடத்தும்படி தேவன் ஏற்ப்படுத்தியிருக்கிற ஆவிக்குரிய தலைவர் அல்லது போதகருக்கு முன்பாக உங்களை முற்றிலுமாக தாழ்த்த கற்றுக் கொள்ளுங்கள். பின்னாளில் அது உங்களுக்கு கிரீடத்தை கொண்டு வந்து சேர்க்கும். உங்கள் போதகரை விட உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்கலாம், ஆகிலும் கற்றுக் கொள்ளத் தக்கதான இருதயத்தோடு அவர்களுக்கு அடங்கியிருங்கள். பின்னாளில் அதின் பலனைக் காண்பீர்கள்.

எலிசா அடக்கமுள்ளவர் மாத்திரமல்ல மிகச் சிறந்த பணிவிடை ஆவியுடையவர். ஒரு மகிமையான ஊழியத்தில் பிரதானமான இடத்தை பிடிக்கிற வரைக்கும் அவர் ஒரு பணிவிடைக்காரனாய்த் திகழ்ந்தார். இரண்டு வசனப் பகுதிகளைத் தருகிறேன். வாசித்துப் பாருங்கள்.

1.அவன் எழுந்து எலியாவுக்குப் பின் சென்று அவனுக்கு ஊழியஞ் செய்தான்.

2. எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த எலிசா

இந்த இரண்டு மேற்கோள்களின் மூலம் பரிசுத்தவான்களுக்குப் பணிவிடைக்காரனாக இருந்தார் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆஹா ! நான் யார் தெரியுமா? என் அழைப்பு என்ன புரியுமா? என்று மேன்மை பாராட்டாமல்



தன்னுடைய அழைப்பு நிறைவேறுகிற காலம் வரையிலும் எலிசா பணிவிடைக்காரனாக இருந்தார்.

தாவீதை சாமுவேல் அபிஷேகம் பண்ணினார். அன்று முதல் நான் ஒரு இராஜா என்று தலையைத் துலுக்கிக் கொண்டு நடக்காமல், தொடர்ந்து ஆடுகளை மேய்த்து (வீட்டாருக்குப் பணிவிடை) போர்த்தளபதியாக (தேசத்திற்கு பணிவிடை) இருந்து தன்னுடைய பணிவிடைக் காலத்தை நிறைவேற்றின பின்னரே அரியணையில் அமர்ந்தார்.

யோசுவா மோசேக்கு ஊழியக்காரனாக இருந்து ஆசாரிப்புக் கூடாரத்தை விட்டு விலகாமல் பணிவிடைக்காரனாக இருந்தார். பின்னாளில் தான் மோசேயின் ஸ்தானத்தில் ஊழியக்காரனானார்.

பிரியமானவர்களே! உங்கள் அழைப்பும் அபிஷேகமும் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனாலும் பரிசுத்தவான்களுக்குப் பணிவிடை செய்வதில் தயக்கம் காட்டாதீர்கள் - தாமதம் செய்யாதீர்கள். பவுல் பிலேமோன் என்ற பக்தனுக்கு நிரூபம் எழுதுகிற பொழுது சுட்டிக் காட்டிய இரண்டு பகுதிகளைத் தருகிறேன் கவனியுங்கள்.

1.சகோதரனே பரிசுத்தவான்களின் உள்ளம் உம்மாலே இளைப்பாறினப்படியால் (வச.7)

2. கட்டப்பட்டிருக்கிற எனக்கு ஊழியம் செய்யும்படி உமக்குப் பதிலாக..... (வச.13)

மேற்கண்ட வசனங்களில் பிலேமோன் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்தார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். பிலேமோன் ஒரு தனி மனிதன், பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிரூபம் ஒரு

தனிக் கடிதம். ஆனால் பணிவிடை செய்யும் ஆவி பரித்தவான்களுக்கு உண்டாக வேண்டும் என்பதற்காகவே பரிசுத்த ஆவியானவர் இந்த சிறு கடிதத்தை அலட்சியப்படுத்தாமல் திருமறையில் இணைத்து வைத்திருக்கிறார்.

எனக்கு பல காரியங்களில் உள்ளார்ந்த திருப்தி உண்டு. அது என்ன தெரியுமா? இப்பொழுது இருக்கின்றவர்கள் உட்பட மகிமையில் பிரவேசித்திருக்கிற பல பரிசுத்தவான்களுக்கு தனிப்பட்ட முறையில் மனமகிழ்ச்சியோடு பணிவிடை செய்திருக்கிறேன்.

அப்படிப் பல பரிசுத்தவான்களுக்கு நான் பணிவிடை செய்த போது அவர்கள் தங்களுடைய கரங்களை என் மேல் வைத்து என்னை ஆசீர்வதித்து ஜெபித்திருக்கின்றனர். அப்படிப் பட்டவர்களின் அபிஷேகம், பிரசங்க வாக்கு வல்லமை இவைகளின் ஒரு பங்கு எனக்குள் கிரியை செய்வதை நான் உணர்கிறேன்.

வாலிபர்களே! உங்கள் சபையில், உங்கள் ஊழியருக்கு சரீரப் பிரகாரமாய் பணிவிடைகளை சந்தோஷமாய் செய்யுங்கள். அதனால் உங்களுக்கு சத்துவம் பெருகும். எலியா எடுத்துக் கொள்ளப்படுகிறவரை எலிசா பணிவிடைக்காரனாய் இருந்தார்.

எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னரோ எண்ணற்ற பணிவிடைக்காரருடையவராக (தீர்க்கதரிசிகளின் புத்திரர்) மாறினார். அடக்கமுள்ள மனிதன் அரியணையில் அமர்த்தப்படுவான் என்பதற்கு எலிசா ஒரு நல்ல சாட்சி.

# 6

# ஆதாயம் தேடாத மனிதன்

எலிசா மிகப்பெரிய தீர்க்கதரிசி. சமுதாயத்தில் மாத்திரமல்ல தேசத்து இராஜாவினிடத்திலும் மிகப்பெரிய செல்வாக்கு உடையவராக இருந்தார். ஆனாலும் இவைகளைப் பயன்படுத்தி எந்த ஆதாயத்தையும் அவர் தேடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாட்களில் பலரைப் பார்க்கிறேன். இதையும் அதையும் விட்டு விட்டு என் இயேசுவுக்காக ஊழியத்திற்கு வந்தேன் என்பார்கள். ஆனால் அவர்களோடு இரண்டு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டால் நமக்கு வியப்பும் வரும்- வியர்வையும் வரும். நுற்றுக்கணக்கான தென்னை மரங்கள், ஏக்கர் கணக்காய் திராட்சைத் தோட்டங்கள், வித விதமான பெயர்களில் விதவிதமான டாக்ஸிகள் எல்லாம் இவர்களுக்கு சொந்தமானவைகளே.

இப்படிப்பட்டவர்கள் பேசுவது வாய்ச்சாலம், நடப்பது மாய்மாலம் என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவிக்கின்றேன். கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்கப்படும் காணிக்கைகள் இப்படிப்பட்ட ஆதாயம் தேடிகளால் தோட்டம் துரவுகளாக மாறிப்போவது மிகப் பெரிய சாபத்தீடாகும். எவரையும் குற்றப்படுத்த நான் இப்படி

எழுதவில்லை. எனக்குள் குமுறும் பக்தி வைராக்கியம் இப்படி எழுதவைக்கிறது.

அப்போஸ்தலர் காலத்தில் ஜனங்கள் தங்கள் காணியாட்சிகளை விற்று கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆனாலும் அப்போஸ்தலர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? பொன்னும், வெள்ளியும் எங்களிடத்தில் இல்லை என்று அறிக்கையிட்டார்கள்.

இப்படி அவர்கள் சொல்ல காரணம் என்ன தெரியுமா? எந்தப் பணத்தையும் அவர்கள் தங்களுக்கென்று எடுத்துக் கொள்ளவில்லை. அவைகள் மேல் சிந்தை வைக்கவில்லை என்பதே. இக்காலத்திலேயும் சில பெந்தெகொஸ்தேகாரர்கள் இதே பாட்டைப் பாடுகிறார்கள். வெள்ளியும் பொன்னும் அவர்களிடத்தில் இல்லை என்பது உண்மை. அத்தனையும் கரண்சிகளாகவே அடுக்கி வைத்திருக் கிறார்கள். கர்த்தருடைய ஜனமே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

எலிசா பன்னிரெண்டு ஏர்பூட்டி உழுது கொண்டிருந்தார். எலியா வந்து சால்வையைப் போர்த்தி அழைக்கிறார். எலிசா என்ன செய்தார் தெரியுமா? அவ்வளவையும் விற்று வங்கியில் டெபாசிட் செய்து விட்டு வரவில்லை. மாறாக மாட்டை அடித்து, ஏர்மூட்டை உடைத்து, சமைத்து கொடுத்து விட்டு விசுவாசத்தோடு புறப்பட்டு வந்தார்.

ஆரம்பமே மிகச்சரியானது, எதையும் எடுத்துக் கொள்ள வேண்டும், எதிர் காலத்திற்கு பாதுகாப்பை வகுக்க வேண்டும் என்கிற அவிசுவாச சிந்தை அவரில்



எழவில்லை என்பது மாத்திரமல்ல,பொருளை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற ஈனத்தன எண்ணமும் அவரில் எழவில்லை.

நம்மை விசுவாசத்தில் அழைத்த - நடத்துகிற கர்த்தர் நம்முடைய பிள்ளைகளையும், சந்ததிகளையும் போஷிக்க வல்லவர் என்பதை விசுவாசிக்க ஒரு சில தலைவர்கள் (ஏன் பெரும்பாலானோர்) மறந்தே போய்விட்டனர்.

சமீபத்தில் ஒரு நாள், எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சலிப்போடு எடுத்தேன். எடுத்த எடுப்பிலேயே சந்தோஷமான செய்தி தொலைபேசி யிலிருந்தது வந்தது. பாஸ்டர். ஒரே ஆண்டில் நீங்கள் கோடீஸ்வரனாக மாறப் போகிறீர்கள். இந்த செய்தியைக் கேட்டவுடன் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சூப்பர் தீக்கதரிசனம் என்று புளகாங்கிதம் அடைந்தேன்.

தொலைபேசியில் பேசியவர் தொடர்ந்தார், கர்த்தருடைய பிள்ளைகள் கோடீஸ்வரர்கள் ஆவதற்கு ஒரு புதிய திட்டம் வகுத்துள்ளோம். பல முன்னனிப் பாஸ்டர்கள் இதில் சேர்ந்து விட்டார்கள். நீங்கள் ஏழாயிரத்து ஐந்நூறு செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து விட்டால் மாதந்தோறும் இந்த இணைப்பு உள்ளவர்கள் மூலமாக பணம் கொட்டிக் கொண்டே இருக்கும். தயக்கம் காட்டாதீர்கள், உங்களுக்கு நெருக்கமான பாஸ்டர் X கூட இத்திட்டத்தின் மூலம் இதுவரை ஒரே மாதத்தில் 20,000 வாங்கி விட்டார் என்று ஒப்புவித்து முடித்தார்.

எனக்கு என்ன பதில் சொல்வதென்றே சில நொடிகள் புரியவில்லை. பணம் பெரிதென்றால்

வேலைக்கே போயிருப்பேன். இப்போதும் பணம் தேவையென்றால் தேவையான அளவு பரலோகம் கொடுக்கும். கோடீஸ்வரனாக மாற அவசியமும் இல்லை, ஆசையும் இல்லை. விசுவாசத்தில் வாழ வரும்புகிறேன் வியாபாரியாக்கி விடாதீர்கள் என்று தொலைபேசி இணைப்பையும் துண்டித்து விட்டேன்.

சில தியாக உள்ளம் கொண்ட அருட்கொடை நிறுவனங்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன். இந்தியாவில் திருச்சபைகள் எழும்ப வேண்டும் என்பதற்காக இங்கும் அங்கும் ஓடி நிதி சேர்த்து உதவி செய்கிற இந்த ஈரமுள்ள இதயங்களை இருகரம் கூப்பி வாழ்த்துகிறேன்.

சொந்த இடமிருந்து ஆலயத்திற்கு கட்டிடம் இல்லையென்றால் அதற்கு நாங்கள் உதவி செய்கிறோம் என்ற இவர்களின் திட்டத்தின் கீழ் பலன் அடைந்த திருச்சபைகள் ஏராளம். ஆனால் இந்தக் கட்டிடத்திற்கான பணத்தை பெறுவதற்காகவே சபையே இல்லாத இடத்தில் இடத்தை வாங்கி ஜனத்தை காட்டி சொத்துக்களைச் சேர்க்கும் ஒரு சில கூட்டமும் உண்டு.

பிரியமானவர்களே! இந்த உலகம் நித்தியமானது அல்ல. நமக்கு நித்தியமான வீடு பரலோகத்தில் உள்ளது. இந்த அநித்தியமான உலகத்தில் அவசியமான யாதொன்றையும் தவிர வேறொன்றின் மேலும் உங்கள் விருப்பத்தை திருப்பாதீர்கள். என்னுடைய அப்பா இயேசு இராஜா, நான் அவரின் பிள்ளை. ஆகவே சாதாரணமாய் வாழக்கூடாது. இராஜரீகமாக வாழ



வேண்டும் என்று உயர்வையும், உல்லாசத்தையும் தேடாதீர்கள். இது ஆபத்தான உபதேசம்.

நம்முடைய ஆண்டவர் இராஜாதான். ஆம்! அவர் தியாகராஜன். தேவனுக்கு சமமாய் இருப்பதை துறந்து தம்மைத் தாம் வெறுத்து அடிமையின் ரூபமெடுத்தவர். அந்த தரிசனம் எப்போதும் உங்கள் கண் முன் நிற்கட்டும்.

நாகமான் என்கிற படைத்தளபதி எலிசாவினிடத்தில் வருகிறார். அந்தக் காட்சி வேதத்தில் வெகு அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. குதிரையோடும், இரதங்களோடும், பொருட்களோடும் வந்து வாசலில் நிற்கிறார். ஆனால் எலிசா வெளியே வரவில்லை. மாறாக உள்ளேயிருந்தே பதில் சொல்லி அனுப்புகிறார்.

ஆதாயம் தேடுகிற ஆவி அவருக்குள் இருந்திருந்தால் இன்று **ஏஜீ** வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் ஆசையாய் வந்து வாசலில் நின்றிருப்பார். அன்பாய் பேசி ஆசனம் தந்திருப்பார். ஆனால் அவரோ ஆதாயம் தேடாத மனிதர். ஆட்களைத் தேடி ஓடாத மனிதர்.

நாகமான் சொஸ்தமாகி விட்டார். திரும்ப எலிசாவின் வீட்டிற்கு வருகிறார். என் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ளுங்கள் என்று நாகமான் கேட்க, நான் வாங்குவதில்லை என்று எலிசா மறுத்துவிட்டார். மீண்டும் மீண்டும் நாகமான் வற்புறுத்தின போதும், தட்டிக் கழித்தாரே தவிர வாங்கி பெட்டிக்குள் வைக்கவில்லை. இப்படி வாங்காததினாலே எலிசாவிற்கு திருப்தியும் சந்தோஷமுமே.

நாகமான் தன் தேசத்திற்கு பயணமாகிறான். எலிசாவின் வேலைக்காரனுக்கோ ஏகப்பட்ட ஏமாற்றம், எரிச்சல். விட்டேனா பார் என்று சட்டென புறப்பட்டு ஓடுகிறான். இவனைக் கண்ட நாகமான் தன் இரத்தை விட்டு இறங்கி விசாரிக்கிறான்.

அந்த வேலைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? 1. இரண்டு தீர்க்கதரிசியின் புத்திரர்கள் இப்போதுதான் வந்தார்கள்.

2. வெள்ளியும், மாற்றுவஸ்திரத்தையும் என் ஆண்டவன் கேட்கச் சொன்னார் (II இராஜா 5:22, 23)

இவன் பயன்படுத்தின இரண்டு பெயர்களைப் பாருங்கள். 1. குழந்தைகளுக்கு (புத்திரருக்கு) 2.ஆண்டவர் (எஜமான்) கேட்கச் சொன்னார். அவ்வளவு தான், ஐஸ்கட்டியைப் போல நாகமான் உருகிப் போனார். ஒரு தாலந்தென்ன, இரண்டு தாலந்தைப் பெற்றுக் கொள். நீயேன் சுமக்கிறாய்? சுமப்பதற்கு ஆளையும் நானே அனுப்புகிறேன் என்று சொன்னார்.

இன்றும் இப்படித்தான் சில ஊழியக்காரர்கள் (வேலைக்காரர்கள்) எதிலே எதை எப்படி பெறலாமென்று ஏங்கித் தவிக்கிறார்கள். அவர்களின் முடிவு கேயாசிக்கு ஏற்பட்ட முடிவுதான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டிற்கு ஊழியத்திற்கு சென்றிருந்தேன். அது சாப்பாட்டு நேரம், பாவம் இந்தியாவின் சிறுபிள்ளைகளுக்கு துணியே



இருக்காதாமே, பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது என்று ஒரு சகோதரி சொன்னார். எனக்கு சுர்ர்ர் என்று மிளகாய் கடித்தது போல் ஆகிவிட்டது. நீங்கள் எப்போது இப்படிப்பட்டவர்களைப் பார்த்தீர்கள் என்று நச்செனக் கேட்டேன். நாங்கள் நேரடியாகப் பார்க்கவில்லை, புகைப்படத்தில் பார்த்தோம் என்ற சில படங்களை காண்பித்தார்கள்.

விஷயம் படு சீரியஸாக போய்விடும் என்பதை உணர்ந்து கொண்டேன். சிரித்துக் கொண்டே சிலேடையாக சொன்னேன். எங்கள் பிள்ளைகள் காந்தியைப் போல் உடுத்தியது ஒரு காலம். இப்போது நேருவைப் போல் உடுத்துகிறார்கள். எங்கள் நாடு வெப்ப நாடாய் இருப்பதினால் சில வேளைகளில் உடைகளுக்கு ஓய்வு கொடுத்து விடுவார்கள்.

பெரிய வெடி சிரிப்பில் விவாதம் ஓய்ந்து போனது. ஆனால் என் இதயத்தின் ஆழத்தில் மிகப் பெரிய காயம் ஏற்பட்டு விட்டது.

பிரியமானவர்களே! இலவசமாய் இரட்சிப்பைப் பெற்றோம், இலவசமாய் வரங்களைப் பெற்றோம். அதை இலவசமாக மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாகும்.

என்னை வெளிக்கூட்டங்களுக்கு அழைக்கும் பொழுது கூட்டத்தின் முடிவில் நல்ல தொகையினை காணிக்கையாக அழைத்தவர்கள் கொடுப்பார்கள். அதை நான் எனக்கென பயன்படுத்தியதில்லை. என்னுடைய சபைக்கு வரும் ஊழியர்களுக்கும், ஊழியத்திற்கும் பகிர்ந்து கொடுத்து விடுவேன்.

ஆனால் ஒரு நாள் என் ஜெப வேளையில் ஆண்டவர் என்னோடு பேசினார், உன்னை போஷிப்பதற்காக உனக்கொரு மந்தையைக் கொடுத்துள்ளேன். எனவே நீ வெளிக் கூட்டங்களுக்கு போகும் போது உன் போக்குவரத்து செலவைத் தவிர அதிக பட்சமாக ஒரு ரூபாய் கூட நீ காணிக்கையாக வாங்ககூடாது என்றார்.

அது எனக்கு துக்கமாக இல்லாமல் சந்தோஷமாக இருக்கிறது. இந்தியாவிற்குள் என்னை எங்கு அழைத்தாலும் இதைக் கடைப் பிடிப்பேன் என்று கர்த்தரிடம் பொருத்தனை செய்தேன். இதை நிறைவேற்ற இம்மட்டும் கர்த்தர் எனக்கு உதவி செய்தார்.

பிரியமான ஊழியர்களே! பணம் நமக்கு முக்கியமாக இருக்கக்கூடாது. ஜனம் தான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். எலிசா காணிக்கை வாங்கவில்லை அதற்காக அவர் தரித்திரனாக இருந்தாரா? இல்லை, இல்லவே இல்லை. கர்த்தர் அவரைப் போஷித்தார், அவர் வேலைக்காரனையும் போஷித்தார்.

அது மட்டுமா, எலிசா நடத்தி வந்த தீர்க்கதரிசன பள்ளிக் கூடத்தில் பயின்ற தீர்க்கதரிசனப் புத்திரர் அனைவரையும் அற்புதமாய் நடத்தி வந்தார்.

எலியாவுக்குப் பின்னர் எலிசா ஓடினார். ஆதாயத்திற்காக அல்ல, ஆவியின் வல்லமையை மாத்திரம் எதிர்பார்த்து, நடந்தது என்ன? எலியாவின்



கைகளுக்குத் தண்ணீர் வார்த்த எலிசா எலியாவைப் போல ஆவியின் வரத்தை இருமடங்கு பெற்றுக் கொண்டார்.

இதே கணக்கு தொடர்ந்திருக்க வேண்டும். எலிசாவைப் போல் அவன் உடன் வேலைக்காரனாகிய கேயாசி இருமடங்கு வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? குறைந்த பட்சம் ஒரு சாதாரண தீர்க்கதரிசியாகக் கூட நிற்க முடியாமல் குஷ்டம் அடைந்து வாழ்வை நஷ்டப்படுத்திக் கொண்டான்.

பிரியமான வாசகர்களே! உங்கள் ஓட்டம் எப்படி? உங்கள் இலக்கு என்ன? உங்கள் எதிர்பார்ப்பு எ஁து? எந்த விதமான ஆதாயத்தையும் எதிர்பாராமல் எலியாவைப் பின் தொடர்ந்த எலிசாவைப் போல் இருந்தால் அபிஷேகம் ஆறாய்ப் பெருகி வரும், ஆவியின் வரம் அனல் மூண்ட கிரியைச் செய்யும். உங்கள் ஊழியத்தில் உங்கள் சபையில் உங்கள் வயது ஒத்தவர்களைவிட நீங்கள் அதிகமாய் பிரகாசிப்பீர்கள்.

எலியாவுக்குப் பின் ஒரு எலிசா . ஆனால் எலிசாவுக்குப் பின்னரோ ஒர கூட்டம் தீர்க்கதரிசிப் புத்திரர். இடம் போதவில்லையென்று சொல்லும் அளவுக்கு தீர்க்கதரிசிப் புத்திரர்களுக்கு நெருக்கம்.

என் இனிய வாசகரே! நீங்கள் ஒரு தீர்மானம் எடுங்கள். செல்வமோ, செல்வாக்கோ எனக்கு முக்கியமல்ல, கஷ்டமானாலும், நஷ்டமானாலும் என் தேவனுக்காக உழைப்பேன், பிழைப்பேன் என்று தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது தழைப்பீர்கள்.

பவுல் மிகப்பெரிய செல்வந்தனாக இருந்தவன். கர்த்தரால் எடுத்து வல்லமையாய் பயன்படுத்தப்பட்டவர். அவர் விரல் அசைத்திருந்தால், விருப்பம் தெரிவித்திருந்தால் ஒரு நாட்டிற்கு ஒரு வீடு அவருக்கு சொந்தமாய் கிடைத்திருக்கும். ஆனால் லாபமானவை களை நஷ்டமென்று விட்டு அவர் கடைசி வரையிலும் வாடகை வீட்டிலேயே குடியிருந்து விட்டு தன் ஓட்டத்தை முடித்துக் கொண்டார்.

இது இல்லையே, அது இல்லையே என்று ஏங்காதீர்கள். அவைகளை உடையவர்களைக் கண்டு உங்களுக்குள்ளே தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளாதீர்கள். உங்களுக்கென்று கொடுக்கப்பட்ட அழைப்பின் இலக்கை நோக்கி இன் முகத்தோடு ஓடுங்கள்.

எலிசாவின் வேலைக்காரனாகிய கோயசியின் பரிதாமான நிலையைப் பாருங்கள். முதலில் பொருளாசை, அதினிமித்தம் நாகமானிடம் பொய், அதற்குப் பிறகு எலிசாவிடமே பொய், சேற்றில் அமிழ்கிற மனிதனைப் போல பாவத்தில் மூழ்கிப் போனான்.

எலிசா என்ன கேட்டார் தெரியுமா? என் மனம் உன்னோட கூட செல்லவில்லையா? இந்த கேள்விக்கு கேயாசியால் பதில் சொல்ல முடியவில்லை.

பரிசுத்த ஆவியானவரும் நித்தம் நம்மை இப்படித்தான் கேட்பார். என் மனம் உன்னோடு செல்லவில்லையா? வரவில்லையா? ஆவியானவர் நம்மோடு இருந்தால் இப்படி ஆசை வராது. அடுத்தடுத்து, அடுக்கடுக்காய் பொய் வராது.



பணமயக்கம் எல்லாவித
தீமைகளின் தொடக்கம்
சிற்றின்பம் எச்சரிக்கை - உன்னை
நடை பிணம் ஆக்கிவிடும்.
வசதியைத் தேடி ஓடாதே ஓடாதே
அது தொடுவானம், தொடுவானம்.
வசதிகள் நிறைவுத் தருவதில்லை
வானத்தை எவரும் தொடுவதில்லை.

என்று தந்தை பெர்க்மான்ஸ் பாடியுள்ள இந்த பாடலை மாதத்திற்கு ஒருமுறையாகிலும் நீங்கள் பாடவேண்டும் அல்லது கேட்கவேண்டும்.

அந்தோ! கேயாசி மனம் வருந்தவுமில்லை, மனம் திருந்தவுமில்லை. அந்தப் பண மயக்கம் அவனை நடைபிணமாக்கி விட்டது. எலிசா கேயாசியை சபிக்கிறார். என்ன பரிதாபம்! எலிசாவைப் போல இரு மடங்கு வல்லமையைப் பெற வேண்டிய கேயாசி நாகமானைப் போல பன் மடங்கு குஷ்டரோகத்தைப் பெற்று ஓடிப் போனான். எச்சரிக்கை! இழிவான ஆதாயத்தை எக்காலமும் தேடாதீர்.

எலிசா மரித்துப் போகிறார். அவரை சாதாரண இடத்தில் அடக்கம் செய்தார்கள். அவருக்கு பளிங்கு மண்டபம் யாரும் கட்டவில்லை. அது மட்டுமா? புதைப்பதற்காக தோண்டினர். அவரது எலும்பு, குழியில் போடப்பட்ட பிரேதத்தை உயிரோடு எழுப்பியது. அதன் பின் அந்தக் குழியை என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நினைவு மண்டபம் கட்டவில்லை என்பது மாத்திரம் நிச்சயமாகத் தெரியும்.

சாதாராண மனிதனாக ஊழியத்தைத் துவங்கி சாதாரண மனிதனாக நடந்து கொண்டு சாதாரண மனிதனைப் போல மரித்து சாதாரணமாக அடக்கம் பண்ணப்பட்ட அந்த அசாதாரண மனிதனுக்குள்ளிருந்த ஆதாயம் தேடாத ஆவி நம்மைப் பற்றி பிடிப்பதாக.

ஆதாயம் தேடாத ஆவி நம்மைப் பற்றிப் பிடிப்பதாக.

# 7

# அயராது ஓடிய மனிதன்

கடந்த அத்தியாயங்களில் எலிசாவின் மேன்மையான அனுபவங்களை கண்டீர்கள். எழுதப்படாமல் விட்டவைகள் எத்தனையோ உண்டு. ஊழியப் பாதையில் உற்று நோக்கினால் இயேசு கிறிஸ்துவின் நிழலை உங்களால் காண முடியும்.

இயேசு தண்ணீரை திராட்சை ரசமாக்கினார். குஷ்டரோகியை சொஸ்தமாக்கினார். மரித்தோரை உயிரோடு கூட எழுப்பினார், இதைப் போலவே எலிசா கெட்டுப்போன தண்ணீரை நல்லதண்ணீராய் மாற்றினார். குஷ்டரோகியாகிய நாகமானை சொஸ்தமாக்கினார். சில வாற் கோதுமை அப்பங்களைக் கொண்டு சில நூறுகளைப் போஷித்தார். மரித்த சிறுவனை உயிரோடு எழுப்பினார்.

இதை வாசிக்கும் பொழுது, எவ்வளவு பெரிய மகிழ்ச்சி தெரியுமா? எலிசாவை பழைய ஏற்பாட்டு காலத்தில் இவ்வளவு மகிமையாய் பயன்படுத்தியவர் இந்தக் கடைசி கால சபையை எத்தனை மகிமையாய் பயன்படுத்துவார் என்று யோசித்துப் பாருங்கள்.

அவருடைய செயல்பாட்டிலும் இயேசுவைப் பார்க்கின்றேன். சூனேமியாளின் குழந்தை மரித்துப் போய் விட்டது. எலிசா அந்த அறைக்குள் செல்கிறார். குழந்தையின் மேல் முகத்துக்கு முகம் படும்படியாகவும்

உள்ளங்கையின் மேல் உள்ளங்கை இருக்கும் படியாகவும், குப்புற விழுந்து அந்தப் பிள்ளையை உயிர்ப்பித்தார். இயேசுவும் அப்படித்தானே. நம்மை உயிர்ப்பிக்கும்படி' தம்மை வெறுத்து நம்மைப் போலாகி தனது இன்னுயிரை தந்து இரட்சித்தார். இந்த சம்பவத்தை நீங்கள் தியானித்துப் பாருங்கள். ஆழமான, அளவில்லாத அரிய அகவுணர்வு உங்களுக்கு கிடைக்கும்.

இத்தனை மேன்மையான அனுபவங்கள் எலிசாவுக்கு இருந்தாலும் அவர் கடந்து வந்த பாதை அவ்வளவு எளிமையானதல்ல. சோர்வின் அம்புகள் பல்வேறு திசைகளிலுமிருந்து அவரைத் தாக்கின. அதைரியமூட்டும் வார்த்தைகள், அவமானப்படுத்தும் வார்த்தைகள், அலட்சியப்படுத்தும் வார்த்தைகள், அவஸ்தையூட்டும் சுகவீனங்கள் அத்தனையும் அவரை நெருக்கினாலும் தன் அழைப்பில் அயராது ஓடிய இந்த மாமனிதனுக்காய் கர்த்தரைத் துதிக்கின்றேன்.

**எஜமானால் ஏமாற்றம் :** எலியா எலிசாவை அழைத்தார். எங்கு போனாலும் எலிசா பின் தொடர்ந்தார். என்ன சொன்னாலும் மகிழ்ச்சியோடு செய்தார். ஆனால் கடைசி நாளில் என்ன நடந்தது தெரியுமா? நீ இங்கேயே இரு என்னை பெத்தேல் வரைக்கும் கர்த்தர் போகச் சொல்கிறார். வா என்று சொல்வார் என்று எதிர்பார்த்த எலிசாவுக்கு இங்கேயே இரு என்ற வார்தை இடியாய் விழுகிறது. எப்படியோ சமாளித்துக் கொண்டு பெத்தேல் போய்விட்டார். அப்போதாவது எலியா உற்சாகப்படுத்தினாரா?



இல்லை. நீ இங்கேயே இரு, நான் எரிகோவுக்குப் போகிறேன்.

இப்படி ஒரே நாளில் மூன்று முறை எலியா சொன்னது யோசிக்கவே கடினமாக இருக்கிறது.

என்னுடைய தகப்பன், என்னுடைய எஜமான், என்னுடைய வழிகாட்டி இங்கேயே இரு என்று ஒதுக்கித் தள்ளுகிறாரே, வெட்டி விட்டு செல்ல நினைக்கிறாரே என்று எண்ணி எலிசா சோர்ந்து போய் விடவில்லை. மாறாக இறுதிவரை போவேன் என்ற துடிப்போடு சென்றார், பந்தையப் பொருளை வென்றார்.

பிரியமானவர்களே! உங்களை நடத்துகிறவர்கள் உங்களைப் பார்த்து சொல்லுகிற வார்த்தைகள் நீங்கள் எதிர்ப்பார்க்கிற அளவுக்கு இல்லாமல் ஏமாற்றம் தருவது போல் இருக்கலாம். அற்காக சோர்ந்து போய் விடாதீர்கள். உங்களுடைய அழைப்பு உங்களுக்குள்ளே எதிரொலித்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த அழைப்பின் உரத்த சத்தம் உங்களை உந்தித் தள்ளிக் கொண்டே இருக்க வேண்டும். நான் ஊழியத்திற்கென வீட்டை விட்டு வெளியே வந்து சில காலம் ஆன பின்பு, உனக்கு ஊழியத்திற்கு அழைப்பு இருக்கிறதா? அழைப்பு நிச்சயம் இருக்கிறதா? அப்படியயே அழைப்பு இருந்தாலும் எந்த விதமான ஊழியம் என்ற தெளிவிருக்கின்றதா? உன்னைக் குறித்து எனக்கு ஒன்றுமே புரியவில்லை என்று என்னுடைய சொந்த போதகரே என்னைப் பார்த்து கேட்ட போது மயக்கம் வருவதுபோல் ஆகியது, செந்நீரே கண்ணீராய் வடிய ஆரம்பித்து விட்டது.

ஆனால் அதற்காக சோர்ந்து போகவில்லை. மாறாக கர்த்தரிடத்தில் கதறி அழ ஆரம்பித்தேன். விடிவதற்குள், விடியற்காலத்து வெளிச்சம் போல விளக்கம் கிடைத்து விட்டது. காலையில் நேரே என் போதகரிடத்தில் போனேன். கர்த்தர் தான் என்னை அழைத்தார். என்னை அப்போஸ்தலனாக அழைத்துள்ளார் என்று அழுத்திச் சொன்னேன். அவ்வளவுதான் ஆடிப்போனாரோ, அப்ஸட் ஆனாரோ எனக்குத் தெரியாது.

ஆனால் இந்த இருபத்தைந்து ஆண்டுகளை இந்த அழைப்பிலேயே கடக்க தேவன் உதவி செய்தார்.

உங்களை இரட்சிப்பிற்குள் நடத்தியவர்கள், உங்கள் தலைவர்கள், உங்கள் போதகர்கள் சில வேளைகளில் சொல்லுகிற சகல வார்த்தைகள் உங்கள் அழைப்பையும், ஆவியையும் முறியப்பண்ணுமானால் முழங்காலில் நின்று அவைகளை வெல்லுங்கள். முன்னேற்றப் பாதையில் வெல்லுங்கள்.

***2.உடன் வேலையாட்களின் உலைச்சல் :*** கில்காலில் இருந்து யோர்தான் வரை எலியாவும் எலிசாவும் சேர்ந்தே போகிறார்கள். அவ்விடங்களில் ஒரு கூட்டம் ஆயத்தமாக இருந்தது. அவர்கள் அவிசுவாசிகள் அல்ல தீர்க்கதரிசிகளின் புத்திரர்.

அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? இன்றையத் தினம் உன் எஜமானைக் கர்த்தர் எடுத்துக் கொள்ளப் போகிறார். அதன் அர்த்தம் என்ன தெரியுமா? உன் எஜமான் பாதியிலே போய்விடுவார். அவரை நம்பி நீ போகாதே , உன் கதியும் அதோ கதி என்பது தான்.



இப்படியும் ஒரு சிலர் நம்மை அதைரியப் படுத்துவார்கள். போகாதே பின்னாளில் கஷ்டப படுவாய் என்றெல்லாம் பாசம் ஒழுக சொல்வார்கள். அப்படிப்பட்ட வார்த்தைகளை எலிசாவைப் போல் அலட்சியப்படுத்த வேண்டும், எலிசா என்ன பதில் சொன்னார் தெரியுமா? எனக்குத் தெரியும் சும்மா இருங்கள். இந்த சூப்பர் பதிலை நீங்களும் சொல்லிப் பாருங்கள், விமர்சகர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

***3. பாலகரின் பரிகாசங்கள் :*** யோர்தானை இரண்டாகப் பிளந்து ஊடாக கடந்து ஊராரின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து உவகையுடன் திரும்புகிறார் எலிசா.

பொதுவாக முன்னனி ஊழியர்கள் வெளியிடங்களுக்கு செல்கிற பொழுது திருமறைப் பெரியாரே, திருமறை அறிஞரே, போதகச் செம்மலே என்றெல்லாம் புகழ் வார்தை சொல்வார்கள். ஆனால் எலிசா பெத்தேல் என்ற இடத்திற்கு வந்த போது கிடைத்த வரவேற்பை பாருங்கள். மொட்டைத் தலையா ஏறிப்போ என்று நிந்தித்தார்கள். நிந்தித்தவர்கள் யார் என்று தெரியுமா? பெத்தேல்.

இப்படித்தான் பெத்தேலாகிய தேவனுடைய சபையில் வளர்ந்து தேறாத ஆவிக்குரிய குழந்தைகளாகிய சிலர் உங்களை நிந்திக்கலாம். உங்கள் உயரத்தை, உங்கள் தோலின் நிறத்தை, உங்கள் குரலின் ஒலியை, ஏன்? உங்கள் அவயங்களின் குறைவுகளை முதன்மைப்படுத்தி புனைப்பெயர்களை சூட்டி உங்கள் மனதை நோகடிக்க - உங்கள் சமாதானத்தை சாகடிக்க

ஒரு கூட்டமே எழும்பலாம். அப்படிப்பட்டவர்களுக்கஞ்சி அறைக்குள் அடைந்து அடங்கிப் போகாதீர்கள். எலிசாவைப் போல் எழுந்து அவைகளைக் கடிந்து வெல்லுங்கள்.

மொட்டைத்தலையா ஏறிப் போ என்றால் திரும்பிப் போ என்று அர்த்தம். ஆனால் எலிசா திடமனதாய் முன்னேறினார். அவர்களைத் திரும்பிப் பார்த்து கர்த்தரின் நாமத்தில் சபித்தார். என்ன ஆச்சரியம் காட்டுக்குள் இருந்த கரடிகள் வந்து நிந்தித்தவர்களை நிர்மூலமாக்கியது. படிப்பதற்கு சம்பவமாக இருந்தாலும் நல்ல படிப்பினை ஒன்று இதிலே இருக்கிறது. உங்களை நிந்திக்கிறவர்களை நீங்கள் சபிக்கத் தேவையில்லை. மாறாக அவர்கள் பின்னனியில் இருக்கிற நிந்திக்கும் ஆவிகளை சபித்துக் கட்டுங்கள். நிச்சயம் வெற்றி உண்டு.

***4.பயன் பெற்றோரின் பதறல் :*** எல்லாம் எனக்கு உண்டு என்று சொன்ன சூனேமியாளை அழைத்து பிராண உற்பதிட்ட காலத்தில் ஒரு குமாரனை கொண்டிருப்பாய் என்று எலிசா சொல்லுகிறார். அதற்கு நன்றி சொல்வதற்கு பதிலாக என் ஆணடவன் அபத்தம் சொல்லக் கூடாது என்று சொன்னாள். எப்படியோ எலிசாவின் வார்த்தையின்படி குழந்தை பிறந்து விட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தை மரித்துப் போனது. அந்த குழந்தையை அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு நேரடியாக எலிசாவிடத்திற்கு வந்தாள். அவள் கேட்ட முதல் கேள்வி என்ன



தெரியுமா? நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரன் வேண்டுமென்று கேட்டதுண்டோ? எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லையா? *(II இராஜா 4 : 28)* என்றாள். அதிர்ந்து போனார் எலிசா. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நமக்கு வரும். மிகுந்த பாரத்தோடும், ஜெபத்தோடும், பிரயாசத்தோடும் தேவனுடைய வசனத்தையும், விடுதலையையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் போது, நன்றி என்று சொல்வதற்குப் பதிலாக அபத்தம் என்று சொல்வார்கள்.

நீங்கள் கஷ்டப்பட்டு கல்யாணம் நடத்தி வைப்பீர்கள். பின்னாளில் பிரச்சினை வந்தால் முதலில் குற்றப்படுத்துவது உங்களைத்தான். நீங்கள் செய்தது அபத்தம் என்பார்கள். அப்பவே சொன்னனே என்று பல்லவிப் பாடுவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சோர்ந்து போகாதீர்கள்.

நான் முன் நின்று திருமணம் நடத்திவைத்த பல குடும்பங்கள் மகிழ்சியோடு இருக்கிறார்கள். சில குடும்பங்களில் பிரச்சினைகள் உண்டு. பிரச்சினைக்கு காரணம் என்னவென்று கேட்டால், "எல்லாம் இந்த பாஸ்டரால்தான், சும்மாவே இருந்திருப்பேன். இவர்தான் பேசி திருமணத்தை நடத்தி வைத்தார்" என்று இரண்டு பேருமே சொல்லுவார்கள். அதற்காக நான் என்ன சுருண்டா படுத்துக் கொள்ள முடியும். எனது பாதையைத் தொடர்கிறேன்.

பிள்ளை இறந்து விட்டது என்ற செய்தி கிடைத்தவுடன் அடக்கத்திற்கு ஏற்பாடு செய்ய

சொல்லவில்லை எலிசா. அவருக்கு தெய்வத்தினுடைய திட்டம் என்னவென்று தெளிவாகத் தெரியும். தைரியமாக நேரே சென்றார். பிள்ளையை உயிர்ப்பித்து அவளிடம் ஒப்படைத்தார்.

பிரியமானவர்களே! நம்மால் பயன் பெற்றோர் பாதிக்கப்டுகிற வேளையில் பதறுவது இயல்பு. அதைக் கண்டு நாம் பயப்படவும் கூடாது, பதுங்கவும் கூடாது. நம் மேல் இருக்கிற அபிஷேகத்தின் மூலம் நமது தனித்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். ஆவியானவரின் துணையோடு சரியான விதத்தில் அணுகுங்கள். மற்றவர்களின் எதிர்பார்ப்பை விட வெகு சிறந்த தீர்வு உங்களால் ஏற்படும்.

**5.வேலைக்காரர் தரும் வேதனை :** உடன் ஊழியரும் உதவி ஊழியரும் இருப்பது நல்லதுதான். சில வேளைகளில் அவர்களாலேயே ஆபத்தும்-அபத்தமும் வந்து விடுகிறது. எலிசா ஆரம்பத்தில் கேயாசி என்கிற வேலைக்காரனை உடன் வைத்திருந்தார். எலிசாவுக்குத் தெரியாமலேயே எலிசாவின் பெயரைப் பயன்படுத்தி வசூல் வேட்டையில் இறங்கிவிட்டான். நமக்குத் தெரிந்தது நாகமானிடத்தில் வாங்கியது தான், இன்னும் எத்தனைப் பேரிடத்தில் எப்படிக் கையேந்தினாரோ நமக்குத் தெரியாது.

எப்படியும் கேயாசியின் ஈனத்தனமான இந்த செயலால் எலிசாவைக் குறித்து நாகமான் தன் மனதில் கட்டியிருந்த உயர்வான கோட்டை சற்று சரிந்திருக்கும் - சாய்ந்திருக்கும் என்பது உண்மை.



நல்ல வேளை அன்றோடு கேயாசியை எலிசா தன்னிடமிருந்து வெட்டி விட்டார். கூட இருந்து கொண்டே நம்முடைய நற்பெயருக்கு கலங்கத்தைக் கொண்டு வருகிற இப்படிப்பட்ட கேயாசிகளை கொஞ்சம் கூட தயவு பாராட்டாமல் வெளியேற்றி விடுவது நல்லது. தாமதித்தால் அவர்கள் உங்களை வெளியேற்றி விடுவார்கள்.

மற்றுமொரு வேலைக்காரனைக் குறித்து பிந்தின அதிகாரங்களில் வாசிக்கிறோம் (II இராஜா 6) சீரியா தேசத்துத் தண்டுகள் எலிசாவை சூழ்ந்து கொள்கிறார்கள். அதனைக் கண்ட வேலைக்காரன், " ஐயோ என் ஆண்டவனே என்ன செய்வோம்" என்று பதறினான் - கதறினான்.

எலிசா, ஆமாண்டா இப்ப என்ன செய்யறது என்று ஒப்பாரி பாடவில்லை. மாறாக, "ஆணடவரே இவன் பார்க்கும்படி அவன் கண்களைத் திறந்தருளும்" என்று ஜெபித்தார். என்ன ஆச்சரியம், அக்கினி மயமான இரதங்களும் குதிரைகளும் நிற்கிறதை அவன் கண்டான்.

இங்கே ஒன்றை கவனியுங்கள். நம்முடைய விசவாசத்திற்கு ஒத்த ஆவியில்லாத உடன் வேலையாட்கள் நம்மோடிருக்கலாம், உதவாக்கறைகள் இவர்கள் என்று உதறித் தள்ளிவிடக் கூடாது. மாறாக அவர்களை உருவாக்க வேண்டும். அவர்களுக்காக ஜெபித்து நம்முடைய அனுபவத்திற்கு ஏற்றவர்களாக்க வேண்டும்.

**6.ஆளுநர்களின் ஆவேசம் :** தேசத்தில் கடுமையான பஞ்சம். பஞ்சத்தைத் தீர்க்க வழி தெரியவில்லை. அதனால் இராஜாவின் கோபம் எங்கு திரும்பியது தெரியுமா? எலிசாவின் மேல் தான்.

சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவின் தலை இன்றைக்கு அவன் மேல் இருந்தால் தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்கு செய்யக்கடவர் ( II இராஜா *6 :31)* இராஜாவின உக்கிரம் எவ்வளவு கடுமையாக இருந்தது ென்று பாருங்கள். எலியாவின் தலைக்கு யேசபேல் குறி வைத்தது போல எலிசாவின் தலைக்கு இஸ்ரவேலின் இராஜா குறி வைத்தான். எப்போதெல்லாம் தேசத்தில் பொதுப் பிரச்சினை ஏற்ப்படுகிறதோ அப்போதெல்லாம் ஆளுகிறவர்களின் ஆத்திரம் ஆண்டவரின் பிள்ளைகளின் மேல் தான் எழுகிறது என்பது அப்போதிலிருந்து இப்போது வரை வழக்கமாகி விட்டது.

இந்தச் சூழ்நிலையிலும் எலிசா நாடு விட்டு நாடு ஓடாமல் நாடு செழிக்கும்படி நல்லதொரு தீர்க்கதரிசனத்தை வழங்கி பாதகமான சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டார்.

**7. வியாகூலமூட்டும் வியாதி :** இப்பொழுது எலிசாவின் வாழ்வு கால இறுதி கட்டத்திற்கு வந்துவிட்டோம். எலிசா வியாதிப்பட்டார். அந்த வியாதியைக் குறித்து வேதம் சொல்லுவதைக் கவனியுங்கள், எலிசா மரணத்துக் கேதுவான வியாதியாய்க் கிடந்தான் (II இராஜா *13 :14).*



ஐயகோ! எனக்கா வியாதி? அதுவும் மரணத்திற் கேதுவான வியாதியா? இவ்வளவு நாள் ஊழியம் செய்து என்ன பயன்? என்றெல்லாம் எலிசா குமுறவில்லை. மாறாக நடமாட முடியாமல் படுக்கையில் கிடந்தாலும் கர்த்தருடைய வார்த்தையை மக்களுக்கு சொன்னார்.

இராஜாக்கள் அவரைத் தேடி வந்தார்கள் (II இராஜா *13:14)* சாகும் வரையும் அவர் ஊழியம் செய்தார் என்பது தான் சிறப்பு.

பிரியமானவர்களே! உங்கள் கண்கள் மங்கலாம், இதயம் பலவீனப்படலாம், சிறுநீரகம் பாதிக்கப்படலாம், இவைகளெல்லாம் உங்கள் ஊழியத்தை தடுக்க முடியாது - தகர்க்க முடியாது. கடைசி நிமிடம் வரை கர்த்தரின் ஊழியத்தை மகிமையாய் செய்வதற்கு உண்டான விஷேசித்த அபிஷேகத்தை இப்பொழுது கர்த்தர் உங்கள் மீது ஊற்றுகிறார்.

வழிகாட்டிகளின் சோர்வூட்டும் வார்த்தைகளோ, உடனிருப்போரின் உளைச்சல் வார்த்தைகளோ, பாலகரின் பரிகாச வார்த்தைகளோ, ஆள்பவரின் ஆத்திரமூட்டும் வார்த்தைகளோ, வியாதி தரும் வியாகுலங்களோ உங்களை சேதப்படுத்த முடியாது.

இத்தனையும் எலிசாவின் வாழ்க்கயில் வந்தது. அத்தனையும் அவர் ஜெயித்தார் - அயராது ஓடினார். அதே வழியில் நாமும் ஓடுவோம்.

**வெற்றிக் கொடி பிடித்திடுவோம் - நாம்**
**வீர நடை நடந்திடுவோம் !**

# விண்ணக அப்பம்

*அன்பார்ந்தவர்களே,*

போதகர்.கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குகங்கள்.

*அலுவலக தொடர்பு எண்: 94888 56323*